Registered as a News Paper

# உதயன்

விலை ரூபா 6-00

மடல் 14 வள்ளுவர் ஆண்டு 2030 சித்திரை 30 வியாழக்கிழமை (13-05-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 144

## ஸ்ரான்லி மாணவன் நேற்று விடுதலை செய்யப்பட்டார்!

### குற்றச்சாட்டு எதுவும் இல்லை

யாழ்ப்பாணம், மே 13

கடந்த 12 நாள்களாகப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ். ஸ்ரான்லிக் கல்லூரியின் சிரேஷ்ட துணை மாணவ முதல்வன் த சிவரூபன் (வயது 19) மல்லாகம் நீதிமன்றத்தால் நேற்றுப் பிற்பகல் விடுதலை செய்யப்பட்டார்.

காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் ஹேரத் பிரஸ்தாப மாணவனை மல்லாகம் பதில் நீதிவான் எஸ் சபாநாதன் முன் ஆஜர் செய்தார்.

பிரஸ்தாப மாணவன் மீது குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படாததால் அவரைத் தாம் விடுதலை செய்வதாகவும் —

அவரை அவரது பெற்றோரிடம் அல்லது மனித உரிமை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை திங்களன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், மே 13

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு பயணிகள் சேவையை 'லங்கா முடித்த' கப்பல் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்க விருப்பதாக யாழ் சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சேவையில் பயணம் செய்ய ரிக்கெட் பெற்றவர்களை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 3 மணிக்கு யாழ்: ரயில் நிலையத்துக்கு பயண ஏற்பாடுகளுடன் வருமாறு அவர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கும் இந்தக் கப்பலின் சேவை மூன்று தடவைகள் இடம்பெறும்.

மடு, மன்னார் பகுதியில் இருந்து வரும் அதிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து இந்தக் கப்பல் மேலும் சேவைகளை நடத்தலாம் எனக் கூறப்பட்டது (இ-3)

## பாடசாலைகளில் இன்று வழமைநிலை திரும்பும்

யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரி மாணவனான சிவரூபனை விடுதலை செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மேற்கொண்ட பகிஷ்கரிப்பு இன்று முடிவுக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப மாணவன் நேற்று விடுதலை செய்யப்பட்டதை அடுத்து பாடசாலை மாணவர்கள் இன்று வகுப்புகளுக்குத் திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாணவனின் விடுதலை தொடர்பாகவும்—

பாடசாலைப் பகிஷ்கரிப்பு காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாகவும்—யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை, ஸ்ரான்லிக் கல்லூரி அதிபர் வி. மாணிக்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் படை அதிகாரிகளுக்கு விளக்கியிருந்தனர். (இ-3)

# கொழும்புப் பகுதியில் 176 தமிழர்கள் கைது!

## பொலீஸார் - படையினர் இணைந்து தேடுதல்

கொழும்பு, மே 13

கொழும்பு நகரில் பரவலாக நேற்று முன்தினம் இரவு முதல் நேற்றுக் காலை 10. 00 மணி வரை பொலீஸாரும், படையினரும் இணைந்து தேடுதல் மேற்கொண்டனர்.

கோட்டை, மட்டக்குழி, முகத்துவாரம், கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, தெகிவளை ஆகிய பகுதிகளை சுற்றி வளைத்துத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் —

இந்தத் தேடுதலில் 176 தமிழர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்றும் — கொழும்புப் பிரதிப் பொலீஸ் மா அதிபர் பி. என். டி. சில்வா தெரிவித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸாரின் துப்பாக்கிச்சூட்டில் கான்ஸ்டபிள் பலி

வவுனியா, மே 13

வவுனியாவில் பம்பைமடுப் பகுதியில் காவலுக்கு இருந்த பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற

[10 ஆம் பக்கம் பார்க்க]

## 2 சிப்பாய்களின் சடலங்கள் புலிகளினால் ஒப்படைப்பு

வவுனியா, மே 13

ஒட்டுசுட்டானில் தம்மால் கைப்பற்றப்பட்ட அதிரடிப்படையினர் இருவரது சடலங்களை விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைத்துள்ளனர்.

படையினரிடம் ஒப்படைப்பதற்காக இந்தச் சடலங்கள் நேற்று வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

வெலிஓயாவில் படையினரால் கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் இருவரின் சடலங்கள் நேற்று வன்னியில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவால் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

(இ-164-3)

## வவுனியாவில் தனியார் பஸ் வேலை நிறுத்தம்

வவுனியா, மே 13

வவுனியா தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்றுத் திடீர் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

தற்சமயம் இயங்கும் சங்கத்துக்குப் போட்டியாக ஒரு சங்கம் நேற்று ஆரம்பிக்கப் படவிருந்ததைக் கண்டித்தே

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சோதனை நிலையம் மீது துப்பாக்கிப் பிரயோகம்

வவுனியா, மே 13

வவுனியா சிந்தாமணிப்பிள்ளையார் வீதியில் கல்வித் திணைக்களத்துக்கு அருகில் உள்ள சோதனை நிலையம் மீது நேற்றுக் காலை 11, 30 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச்சோதனை நிலையத்தின் ஊடாகச் சென்ற மூவர் அங்கு துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் என்றும் —

படையினர் அவர்களைத் துரத்திச் சென்று தாக்கினர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக ஊழியர் வேலை நிறுத்தம் முடிவு

### நாளை வேலைக்கு திரும்புவர்

கொழும்பு, மே 13

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தம் நேற்று முடிவுக்கு வந்தது.

பல்கலைக்கழக தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் தொழில் அமைச்சருக்கும் இடையில் நடந்த பேச்சுக்களை அடுத்தே வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

இந்தப் பேச்சுக்களில் காணப்பட்ட முடிவுகள் இன்று சகல பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களுக்கும் அனுப்பப்படும் என்றும் —

நாளை சகலரும் வேலைக்கு திரும்புவர் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் வருமாறு:-

★ சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு வரவு—செலவுத்திட்ட திணைக்கள

[10 ஆம் பக்கம் பார்க்க]

## 40 தமிழ்க் குடும்பங்களுக்கு வெளியேற்ற உத்தரவு

கொழும்பு, மே 13

மாத்தளை, உக்குவல என்னும் இடத்தில் இராணுவ முகாமொன்றை அமைக்கும் நோக்கத்துடன் அந்தப் பகுதியில் இருந்து 40 தமிழ்க் குடும்பங்களை வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மலையகத்தில் அதிகரிக்கும் வன்செயல் சம்பவங்களை அடுத்து மாத்தளை, உக்குவல என்னுமிடத்தில் பாரிய இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது.

இந்த முகாமை அமைப்பதற்காக அந்தப் பகுதியில் உள்ள 40 தமிழ்க் குடும்பங்களை வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச் செயலை மலையக அமைப்புக்கள் கண்டித்துள்ளன. (இ-3)

## மடுமாதா உற்சவத்துக்கு முன் படையினர் விலக்கப்படுவர்

### ஆயருக்கு பலகல்ல உறுதி

மட்டக்களப்பு, மே 13

மன்னார், மடு மாதா தேவாலயப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் மடு மாதா உற்சவத்தை ஒட்டி அப்பகுதியில் இருந்து விலக்கப்படுவர் என வன்னி இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்தார்.

மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோசப், இரத்தினபுரி ஆயர் வண. மல்கம் ரஞ்சித் ஆகியோருடன் மடு மாதா தேவாலயத்தில் இடம்பெற்ற சந்திப்பில் மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல இதுபற்றி தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாடிய ஆயர்கள் "உற்சவத்தை முன்னிட்டு இராணுவம் தற்கா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றில் ஆஜராகுமாறு டக்ளஸுக்கு அழைப்பு

கொழும்பு, மே 13

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. அமைப்பின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவை அடுத்த மாதம் 3 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

தனது மகனை ஈ.பி.டி.பி.

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் ஆசைப்பிள்ளை

(முன்னாள் உப அதிபர், நடேஸ்வராக் கல்லூரி)

தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஆசைப்பிள்ளை அவர்கள் 12 - 5 - 99 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் — நாயகம் தம்பதிகளின் அன்பு மகனும், கமலராணியின் அன்புக் கணவரும், முரளீதரன், மௌலீதரன் (கனடா), கிரிதரன் (கனடா), பரணிதரன் (கணக்காளர், கொழும்பு), தரணிதரன், கங்கா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயகௌரி, ஜெகதீஸ்வரி (கனடா), யசோதை (ஆசிரியை, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), வான்மதி (M. L. T. கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மீனாட்சி, காலஞ்சென்ற இளையாச்சி, லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராசா, ஜெயராஜா, கணேந்திரராஜா (ஆசிரிய கலாசாலை, பலாலி), செல்வராணி (கொழும்பு), விமலராணி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், குருபதன், மனோஜா (கனடா), கபிலன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-5-99) வியாழக்கிழமை காலை 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கமலராணி (மனைவி)
பிள்ளைகள்

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(65699)

## சின்னத்துரை சரவணபவான்

(தொழில்நுட்பவியலாளர்,
றியாட் ஒக்சிசன் பிளான்ட், சவுதி அரேபியா)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலையை வசிப்பிடமாகவும்கொண்ட சின்னத்துரை சரவணபவான் அவர்கள் (9-5-99) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சந்திரலேகாவின் அன்புக் கணவரும் சுகந்தி (95-A/L உயிரியல் பிரிவு, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), மாலதி (H N D A. 1 ஆம் வருட மாணவி, உயர் தொழில்நுட்ப நிறுவனம், திருநெல்வேலி), விமலன் (தொழில் நுட்ப நிறுவனம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), சுமதி (2001-A/L வர்த்தகப் பிரிவு, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகநாதன் (ஓவசியர்), உலகநாதன் (உதவி கல்வி அதிகாரி, அடம்பன்), சபாநாதன் (கஜன் மோட்டேர்ஸ், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கதிர்காமு – செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சண்முகநாதன் (லண்டன்), சுபாஸ்சந்திரபோஸ் (சேவையர், வவுனியா), லோகராஜா (பொறியியலாளர், திருகோணமலை), விவேகானந்தன் (லண்டன்), சச்சிதானந்தன் (பிரான்ஸ்), சாராமணி, கலைமாமணி, இலங்காமணி ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்போது தாவடியில் உள்ள இல்லத்தில் இன்று (13-5-99) வியாழக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் முற்பகல் 10.00மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி. சபாநாதன்
(சகோதரன்)

அரசடி வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

(65702)

## செல்லப்பா பீதாம்பரம்

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் அல்வாய் வடக்கு நாவலடிச்சந்தியை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா பீதாம்பரம் அவர்கள் 12-5-99 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்து அவர்களின் அன்புக் கணவரும் கணேசலிங்கம் (பொறியியலாளர், C E.C.B கொழும்பு), பத்மநாதன் (லாவூசியஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காந்தரூபி (மட்டுவில் தெற்கு) அவர்களின் அன்பு மாமனாரும் தர்ஷினி, நிரோஷினி, லக்ஷினி ஆகியோரின் அன்புப் பேரனும் மகேஸ்வரி, குமாரசாமி (இளைப்பாறிய ஓவசியர், P. W. D.) செ. பொன்னம்பலவாணர் (முன்னாள் ஊழியர், காகித ஆலை, வாழைச்சேனை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வைத்திய கலாநிதி நல்லையா (மட்டுவில் தெற்கு), காலஞ்சென்ற கமலநாயகி (நுணாவில் கிழக்கு), மனோகரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-5-99) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அல்வாய் வடக்கு நாவலடிச்சந்தியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி காந்தரூபி கணேசலிங்கம்

"லக்ஷ்மிவாசா",
நாவலடிச் சந்தி,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(சி/7524)

## மருந்து வந்தது

நெல்லியடி, மே 13

மந்திகை மருத்துவமனைக்கு, சலரோக நோயாளிகளின் (கிளினிக்) மருந்து வகைகள், கடந்த திங்கட்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சலரோக நோயாளிகளுக்கான மருந்து வகைகள் இன்மையால் கடந்த இரு வாரங்கள் கிளினிக் பகுதியில் மருந்துகள் வழங்கப்படவில்லை.

தற்பொழுது யாழ். பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்ட இந்த மருந்துகள், அடுத்த சலரோக கிளினிக்கில் நோயாளிகளுக்கு வழங்கப்படுமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-109)

## மாதாந்த உதவிப் பணம்

கொழும்புத்துறை, மே 13

யாழ். பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர்களுக்கான கடந்த ஏப்ரல் மாதத்திற்குரிய கொடுப்பனவு உரிய தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உதவிப்பணம் பெறுவோர் தத்தமது பகுதி தபாலகங்களுக்கு நேரில் சென்று பணத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலக பிரிவு சமூகசேவைத் திணைக்கள உத்தியோகத்தர் கே. வி. சிவனேசன் தெரிவித்துள்ளார்.

(ஐ-30)


ஸ்ரீ செல்வா
சினிமா
தினசரி: 10-30, 2-30
(பழைய நேரம்)
பிரசாந்த் - ரம்பா நடித்த
பூமகள் ஊர்வலம்
சிறந்த குடும்பச் சித்திரம்
(நேரடி CD)
(65695)

நாகம்ஸ்
சுன்னாகம்.
ரஜனி - குஷ்பு - சரத்பாபு
ஜனகராஜ் நடித்த
அண்ணாமலை
காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்)
(65659)

ராஜா
யாழ்ப்பாணம்.
கார்த்திக் -ரம்பா
மற்றும் பலர் நடித்த
உள்ளத்தை அள்ளித்தா
10-30, 2-30,
(சி/7477)

லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி
இன்று முதல்
அர்ஜுன் - பானுப்பிரியா
நடித்த
கோகுலம்
காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரப்படி)
(65664)

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
முகாமையாளர்கள் தேவை

பின்வரும் பகுதிகளுக்குத் துறைசார் அனுபவம் வாய்ந்த முகாமையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய உத்தேசிக்கப்படுகிறது.

1. உணவகம் 2 பதிப்பகம்

- வயதெல்லை: 25 — 50
- சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.
- விண்ணப்ப முடிவு திகதி: 31 - 05 - 1999

சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் ப.நோ கூ. சங்கம்,
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

— பொது முகாமையாளர்

(சி/7521)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஞானம்மா மார்க்கண்டு

[ஓய்வு பெற்ற பன்னவேலை ஆசிரியை]

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி ஞானம்மா மார்க்கண்டு அவர்கள் 11-05-1999 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் இராமுப்பிள்ளை ஆசிரியர் அவர்களின் இளைய சகோதரியும் காலஞ்சென்ற மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கதிர்காமநாதனின் அருமைத் தாயாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நீர்வேலி இராசவீதியில் உள்ள மருமகள் திருமதி சரஸ்வதி நடேசன் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாசிவன் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சரஸ்வதி நடேசன்
[மருமகள்]

இராச வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

[65698]

## அன்ரனி பாலா

(உரிமையாளர், பாலா வெல்டிங் கராஜ்)

யாழ்ப்பாணம் கோயில் ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்ரனி பாலா 11-05-99 அன்று காலமானார்.

அன்னார் இராசையா—நவம் தம்பதிகளின் அன்பு மகனும் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் திரு. திருமதி அழகரின் அன்பு மருமகனும் எனுசி, டனுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வனிதா, வனஜா (பிரான்ஸ்), ரவி (ஹொலண்ட்), சாந்தன், சுரேந்திரன், றஜிதா (பிரான்ஸ்), சதீஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் றெஜினோல்ட் (பிரான்ஸ்), சகாயராசா (பிரான்ஸ்), சிறி (பிரான்ஸ்) சுகந்தி, சிவசேகரம், சுதா, ஆகாஷ் (சுவிஸ்), சிவகுமாரி (சுவிஸ்), சிவமூர்த்தி (சுவிஸ்), சிவநாதன், சிவராசா, றஜனி ஆகியோரின் மைத்துனரும் கனத், வினோத், லியாட்ரிஸ் (பிரான்ஸ்), நந்திசா (பிரான்ஸ்) சச்சா [பிரான்ஸ்] ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுரேந்திரன்
[தம்பி]

10, கோயில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[65694]

## திருமதி கனகரெத்தினம் அன்னபூபதி

நாடக, திரைப்பட நடிகர் அமரர் டிங்கிரி கனகரெத்தினத்தின் மனைவி அன்னபூபதி (12 - 05 - 99) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கனகலிங்கம் (ஆசிரியர், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை), கலைதாசன் (வெல்டிங் உரிமையாளர்), கேமலதா, செல்வரதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும்.

அருந்தவதேவி, மஞ்சுளாதேவி, புஸ்பராஜா, யோகராஜா ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (99-05-13) வியாழன் பிற்பகல் 1.00 மணியளவில் வில்லூன்றி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
க. கனகலிங்கம்
(மகன்)

82/9(34), யாழ். வீதி,
யாழ்ப்பாணம்.

(65703)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Fax No. 070-212223
FOREIGN T.P. No.
0094-70-212223

# யூகோ. படை வாபஸ் தொடங்கியது!

## தாக்குதல் தொடரும் என்கிறது நேட்டோ

பெல்கிரேட், மே 13

கொசோவோ பிராந்தியத்தில் நிலை கொண்டுள்ள தனது துருப்பினரை வாபஸ் பெறத் தொடங்கியுள்ளதாக யூகோஸ்லாவியா அறிவித்துள்ளது. எனினும் நேற்று 49 ஆவது நாளாக நேட்டோ படைகள் சேர்பிய நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தின.

'கொசோவோ விடுதலை இராணுவத்துக்கு எதிரான தாக்குதல்கள் முடிவடைந்து விட்டன; எனவே நாம் யூகோஸ்லாவியாவுக்குத் திரும்பிச் செல்கிறோம்' என்று யூகோ. இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக 'ரொய்ட்டர்' செய்தி கூறுகிறது.

எனினும் எவ்வளவு எண்ணிக்கையான துருப்புக்கள் வாபஸ் பெறப்பட்டுள்ளனர் என்ற விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

ஐ. நா. படையொன்று கொசோவோவிற்கு அனுப்பப்படுவது குறித்த உடன்படிக்கை ஏற்பட்டால் நேட்டோவின் தாக்குதல் தொடங்குவதற்கு முன்பிருந்த சேர்பிய இராணுவத்தினரே கொசோவோவில் நிறுத்தப்படுவர் என்று பெல்கிரேட் கூறியுள்ளது. ஆனால் சேர்பிய இராணுவத்தினர் கொசோவோவை விட்டு வெளியேறுவதால் மாத்திரம் வான்தாக்குதல் நிறுத்தப்படமாட்டாது என்றும்—

தமது உடன்படிக்கையில் உள்ள ஐந்து அம்சங்களும் நிறைவேற்றப்படும் பட்சத்திலேயே தாக்குதல்கள் நிறுத்தப்படும் எனவும் —

'நேட்டோ' பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் ஆரம்பித்து 49 ஆவது நாளான நேற்றும் நேட்டோவின் வான்தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றது. (ஐ)

# எல்லை மீறும் நேட்டோவின் உத்தி; இந்திய அரசு கவலை தெரிவிப்பு

புதுடில்லி, மே 13

நேட்டோ தற்போது கடைப்பிடிக்கும் புதிய போர் உத்தி குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

நேட்டோ கூட்டணி நாடுகளின் பிராந்தியத்துக்கு வெளியேயும் ஐரோப்பிய, அத்திலாந்திக் பிராந்தியத்துக்கு அப்பாலும் அது தாக்குதல் தொடுக்க இந்த புதிய உத்தி அனுமதி அளிக்கிறது.

இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது சர்வதேச சட்டம், ஐ. நா கோட்பாடு மற்றும் நாடுகளுக்கிடையிலான அமைதியான சகவாழ்வு நெறிகளையும் மீறுவதாக அமையும் என இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. பாதுகாப்புச்சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றி அதன் செயற்பாட்டில் தலையிடுவதான நேட்டோவின் போக்கு அதிகரித்து வருவதை இந்தியா ஏற்கவில்லை என்றும—

நேட்டோ சில நாடுகளின் கூட்டணி ஆகும் எனவே சர்வதேச அமைப்பான ஐ. நாவை அது மதிக்காமல் இருக்க இயலாது எனவும் —

நேட்டோ தனதுநடவடிக்கைக்குரிய எல்லையை விரிவாக்கும் திட்டம் அனைத்து பெரிய, சிறிய நாடுகளுக்கும் கவலை தரும் விடயமாகும். என்றும் —

இந்தியா தெரிவித்துள்ளது. (ஐ-க)

### பகிரங்க மன்னிப்பு

பெல்கிரேட்டில் உள்ள சீனத் தூதரகம் நேட்டோவினால் தாக்கப்பட்டதை அடுத்து அதிபர் கிளின்ரனும் நேட்டோ நாடுகளின் தலைவர்களும் சீனாவிடம் பகிரங்கமான மன்னிப்புக் கோரியுள்ளனர்.

'எங்களை மன்னிக்கவும் நாங்கள் சீனத் தூதரகத்தை தாக்க ஒரு போதும் திட்டமிடடிருக்கவில்லை' என்று அமெரிக்கா தனது பகிரங்க மன்னிப்பில் தெரிவித்துள்ளது.

கிளின்ரன் மன்னிப்புக் கோரியதை அடுத்து சீனாவில் இடம்பெற்று வந்த ஆர்ப்பாட்டங்கள் தணிந்துள்ளன.

## நேட்டோ படையினர் 'கிளஸ்ரர்' குண்டுகளைப் பாவிப்பதற்கு கண்டனம்

நியூயோர்க், மே 13

யூகோஸ்லாவியாவுக்கு எதிரான வான் தாக்குதலில் 'நேட்டோ' கிளஸ்ரர் குண்டுகளை பயன்படுத்துவதை மனித உரிமைகள் குழு கண்டித்துள்ளது.

கிளஸ்ரர் குண்டுகள் நிலக்கண்ணி வெடிகள் போன்று பாதிப்புத் தருகின்றன எனவும் இத்தகைய குண்டுத் தாக்குதல்களை நிறுத்துமாறும் கோரி மனித உரிமைகள் குழு நேட்டோவை வற்புறுத்தும் அறிக்கை ஒன்றை நியூயோர்க்கில் சமர்ப்பித்துள்ளது.

இதேவேளை —

மனித உரிமைகள் குழுவின் இந்தக் கோரிக்கை தவறான திசையில் இருப்பதாகக் கூறும் அமெரிக்க அதிகாரிகள் இதற்குப் பதிலாக அதிபர் மிலொசெவிக் மக்களுக்கு இழைத்த அட்டூழியங்களின்பால் குழு தனது கவனத்தைச் செலுத்த வேண்டும். எனக் கேட்டுள்ளனர்.

ஒரு குண்டில் இருந்து வெடித்துச் சிதறி பல குண்டுகளாக வெடிக்கும் குண்டுகளே 'கிளஸ்ரர்' குண்டு எனப்படுகிறது. (ஐ-க)

## சீன தூதரகத் தாக்குதல்; இலங்கை அனுதாபம்

பெல்கிரேட்டில் உள்ள மக்கள் சீனக் குடியரசின் தூதரகம் மீது நேட்டோ விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதல் குறித்து இலங்கை அதன் அதிர்ச்சியையும், அனுதாபத்தையும் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் சீனவெளிவிவகார அமைச்சர் தங்ஜியாசுவானுக்கு அவசர செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

'அரசாங்கத்தின் சார்பிலும் இலங்கை மக்கள் சார்பிலும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்' என்று அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-க)

## 'ரைம்ஸ்' முன் அட்டையில் டெண்டுல்கரின் படம்!

வாஷிங்ரன், மே 13

இந்தியாவின் பிரபல கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரின் படத்தை பிரபல 'ரைம்ஸ்' சஞ்சிகை அதன் முன் அட்டையில் வெளியிட்டு அவருக்குப் பெருமை சேர்த்துள்ளது.

'ரைம்ஸ்' சஞ்சிகையின் முன் அட்டையில் இடம் பெறும் முதலாவது கிரிக்கெட் வீரர் என்ற பெருமையும் இதன் மூலம் கிட்டியுள்ளது.

மரடோனாவுக்கு அடுத்த படியாக இந்த கௌரவம் பெற்ற விளையாட்டு வீரர் டெண்டுல்கர் ஆவார்.

கிரிக்கெட் உலகின் ஜாம்பாவான் என வர்ணிக்கப்படும் ஆஸ்திரேலியாவின் டொனால்ட் பிரட்மனுடன் டெண்டுல்கரை ஒப்பிட்டுள்ளது 'ரைம்ஸ்' சஞ்சிகை. (ஐ-க)

## விடை பெறுகிறார் நெல்சன் மண்டேலா!

ஜோஹனர்ஸ்பேர்க், மே 13

'இளைப்பாறிய பின்னர் எனது கிராமத்திற்குச் சென்று வாழவே விரும்புகிறேன். ஆனால் எனது நாட்டுமக்கள் எதை விரும்புகிறார்களோ அதைச் செய்யவே நான் விரும்புகின்றேன்'

இவ்வாறு கூறுகிறார் தென்னாபிரிக்காவின் கறுப்பினத் தலைவர் அதிபர் நெல்சன் மண்டேலா.

பதவியேற்ற ஐந்தாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வைபவங்களில தற்போது பங்குபற்றி வரும் மண்டேலா தென்னாபிரிக்காவில் நடைபெறவிருக்கும் தேர்தல்களைத் தொடர்ந்து அதிபர் பதவியில் இருந்து விலக உள்ளார்.

எதிர் காலத்தில் மண்டேலா சர்வதேச மத்தியஸ்தராகப் பதவி வகிக்கலாம் என ஊகங்கள் எழுந்துள்ளன. (ஐ)

## நீதிமன்றத் தீர்ப்புக்கு காங்கிரஸ் வருத்தம்

சென்னை, மே 13

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மேன்

உலக அரங்கில்

முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு காங்கிரஸ் கட்சி கவலை தெரிவித்துள்ளது.

நீதிமன்ற தீர்ப்புக் கவலை அளிப்பதாகவும், வருத்தமளிப்பதாகவும் உள்ளது என்று காங்கிரஸ் தலைவர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்ப்புக் குறித்து தமது கட்சி விமர்சனம் செய்யாது என்றும் அவர் தெரிவித்தார்.

இத்தீர்ப்புக் குறித்து தமிழகக் கட்சிகளின் தலைவர்கள் கருத்துக்கூற மறுத்து விட்டனர். (ஐ-3-6)

## ஜெருஸலேமில் உள்ள பலஸ்தீன அலுவலகத்தை மூடுமாறு உத்தரவு

ஜெருஸலேம், மே 13

ஜெருஸலேமில் உள்ள பலஸ்தீன இயக்கத்தின் தலைமையகத்தை மூடிவிடுமாறு இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கை எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறும் இஸ்ரேலிய தேர்தலின்போது வன்முறைகளில் ஈடுபட இஸ்ரேலைத் தூண்டலாம் என்ற அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீன தலைமையகம் சமாதான உடன்படிக்கைகளை மீறி உள்ளூர் அரசிலில் தலையிட்டு வருவதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டி வருகிறது எனினும் இஸ்ரேலின் குற்றச்சாட்டை பலஸ்தீனம் மறுத்து வருகிறது.

இந்த அலுவலக விவகாரம் தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தீர்க்கும் முயற்சியில் அமெரிக்காவும் ஈடுபட்டுள்ளது. (ஐ)

## அல்பேனியக் குழந்தைக்கு 'அமெரிக்கா' எனப் பெயர்

மவுண்ட்ஹோலி, மே 13

மசிடோனியாவில் இருந்து அமெரிக்கா சென்றடைந்த கொசோவோ அல்பேனிய இனப் பெண் ஒருவர் அங்கு சென்ற கையோடு ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார்.

தனது மகன் அமெரிக்க மண்ணில் பிறந்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள இக் குழந்தையின் தந்தையான நயிம் கராலிஜ் (வயது 28) என்ற விவசாயி தனது மகனுக்கு 'அமெரிக்கா' எனப் பெயரிடப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

இக் குழந்தை அமெரிக்காவில் பிறந்த காரணத்தினால் அதற்கு அமெரிக்கப் பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## பாப்பரசரின் உருவம் நாணயத்தில் பொறிப்பு

புக்காரெஸ்ட், மே 13

பாப்பரசரின் மூன்று நாள் பயணத்தை முன்னிட்டு ருமேனிய அரசு அவரது உருவம் பொறித்த தங்கம், வெள்ளி நாணயங்களை புழக்கத்தில் விட்டுள்ளது.

ஆயிரம் தங்கக் காசுகளும் 2 ஆயிரம் வெள்ளிக் காசுகளும் புழக்கத்தில் விடப்பட்டுள்ளன. காசுகள் ஒவ்வொன்றினதும் எடை 30 கிராம்.

## ஜெயலலிதாவுடன் சரத்பவார் ஒரு மணிநேரம் முக்கியபேச்சு

சென்னை, மே 13

மூத்த காங்கிரஸ் தலைவர் சரத்பவார் நேற்று சென்னையில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்து சுமார் ஒரு மணிநேரம் முக்கிய பேச்சு நடத்தினார்.

'போயஸ் கார்டன்' இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் பின்னர் அ.தி.மு.க. கட்சி அறிக்கை ஒன்றை விடுத்தது.

நடைபெறவுள்ள தேர்தலில் கூட்டணி அமைத்துக்கொள்வது குறித்தும் தொகுதி உடன்பாடு குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசித்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் காங்கிரஸ் — அ. தி. மு. க. ஆகியவற்றின் தலைவர்கள் சந்திப்பது இதுவே முதல் முறையாகும். (ஐ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

தம்பிராசா நிருஜன் ஆகிய எனது விசேட அடையாள அட்டையும் 0902025926 பாடசாலை அடையாள அட்டையும் 09-05-99 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சிவம் சைக்கிள் கடை கோண்டாவில் ஸ்ரேசனடி என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.
(65682)

அஜந்தினி தங்கராஜா ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0902035123) வட்டுக்கோட்டைக்கும், ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 50/5, சங்கிலியன் வீதி, நல்லூர் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (65683)

### விற்பனைக்கு

படித்து விட்டீர்களா? "குழந்தையும் தாயும்" கர்ப்பிணிப் பெண்களுக்கு டாக்டர் D.C. அம்பலவாணர் (யாழ். போதனா வைத்திய சாலை சத்திர சிகிச்சை நிபுணர்) எழுதியது. விலை 100/- கிடைக்கும் இடம்: யாழ்ப்பாணக்கல்லூரி, ஆஸ்பத்திரி வீதி, (போதனா வைத்திய சாலை முன்). (65674)

### விண்ணப்பப் படிவம்

இலங்கை தொழில் நுட்ப சேவையில் ii 'ஆ' வகுப்பில் தொழில் நுட்ப அலுவலர் (சிவில்) மற்றும் படவரைஞர் பதவிகளுக்கான படிவம் விற்பனையாகின்றது. நாயக பாலன் மானிப்பாய்.
(65663)

## தையற் பயிற்சி வகுப்பு

கொழும்புத்துறை, மே 13

யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் தற்போது ஆறுமாத கால தையற் பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிறது.

இங்கு பயிற்சி பெற்ற இரு பெண் ஆசிரியர்களால் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆடை தயாரித்தல், அலங்காரப் பொருள்கள், கைவேலைப் பயிற்சி ஆகியன நடைபெற்று வருகின்றன. (ஐ—30)

## செத்தல் மிளகாய் கொள்வனவு

அரியாலை, மே 13

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளிடம் இருந்து செத்தல் மிளகாயை கொள்வனவு செய்து வருகின்றது.

செத்தல் மிளகாய் கிலோ 105 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்பட்டு வருவதாகவும் —

செத்தல் மிளகாயை வழங்க முன்வரும் விவசாயிகள் சங்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் —

சங்கத் தலைவர் சி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.
(ஐ-17)


### விற்பனையாகின்றன

பொப்பிசைப் பாடல்கள்
சோகப்பாடல்கள்
தத்துவப் பாடல்கள்
மற்றும்
இனிமையான பாடல்கள்
அடங்கிய
**மோனிஷா என்மோனலிஷா**
பாட்டுப் புத்தகம்
விற்பனையாகிறது.
S.K. பிரபாகரன்,
ஆனைக்கோட்டை.
[65690]


### பளைப்பிரதேசத்தில் கெயர் உதவியுடன்

# பெண் விவசாயிகளுக்கான வீட்டுத் தோட்டங்கள் அமைப்பு

தென்மராட்சி, மே 13

'கெயர்' நிறுவனத்தின் உணவுப்பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் பெண் விவசாயிகளுக்கான உயிரியல்வள வீட்டுத் தோட்டங்கள் பளைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

அவற்றுக்கான விவசாய உள்ளீடுகளும், கை உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் வேம்பொடு கேணி கிராம அலுவலர் பிரிவில் உள்ள முப்பது பெண் பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகளும், விவசாய கை உபகரணங்களான மண்வெட்டி, மண்வெட்டிப் பிடி, குப்பைவாரி, வாளி, முட்கரண்டி ஆகியனவும் வழங்கும் வைபவம் இந்திராபுரம் மக்கள் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

'கெயர்' நிறுவன பளைப் பிரிவு இணைப்பாளர் எஸ். இராசலிங்கம், வடமராட்சிப் பிரிவு இணைப்பாளர் எஸ். கதிர்காமநாதன் ஆகியோர் இப் பொருள்களை வழங்கினர்.

அடுத்தவாரமளவில் வீட்டுத் தோட்டத்திற்கான நிலக்கடலை, பயறு, கௌபீ ஆகியவற்றை வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
(ஐ-117)

## கால்நடை நிலையங்கள் சாவகச்சேரியில் அமைப்பு

தென்மராட்சி, மே 13

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் பிரிவில் கிராமிய கால்நடை அபிவிருத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையங்களில் கால்நடை அபிவிருத்தி அலுவலர்கள் குறித்தொதுக்கப்படும் நாள்களில் சென்று கால்நடை சம்பந்தமான வைத்திய ஆலோசனைகளை வழங்குவர்.

கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கிராமிய கால்நடை அபிவிருத்தி நிலையத்திற்கு மாதத்தின் முதலாம் மூன்றாம் வெள்ளிக்கிழமைகளில் உத்தியோகத்தர்களும், போதனாசிரியர்களும் செல்வதாகவும், விரைவில் கொடிகாமத்திலும் இந் நிலையம் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது (ஐ-117)


### யா / திருக்குடும்ப கன்னியர் மடம்

பாடசாலை அபிவிருத்திச் சங்கப்

## பொதுக்கூட்டம்

ஏற்கனவே அறிவித்ததன்படி மேற்படி கூட்டம் 15 - 05 - 99 சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

அனைத்துப் பெற்றோரையும் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(65693)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## செல்வி திரேசா அந்தோனிப்பிள்ளை

(முன்னாள் ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், 140, யாழ். பிரதான வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி திரேசா அந்தோனிப்பிள்ளை 13 – 04 – 99 இல் இறைவனடி சேர்ந்த 31 ஆம் நாள் நினைவுத் திருப்பலி இன்று (13 - 05 - 99) வியாழக்கிழமை காலை 6. 30 மணிக்கு கொழும்புத்துறை முதியோர் இல்லத்தில் இடம் பெறும்.

இவர் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை ஆனாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சவிரிமுத்து, சில்லாலை முத்து வைத்தியர் செபஸ்ரியாம் பிள்ளை, திருமதி சூசானம்மா ஞானப்பிரகாசம், அருள்சகோதரி லியோனி, திருமதி அன்னம்மா பிலிப்புப்பிள்ளை, திருமதி றோசமுத்து அரசக்கோன், திருமதி பிரிஜெட் வேதநாயகம், அருள் தந்தை எஸ். ஏ. சுவாம்பிள்ளை ஆகியோரின் சகோதரியுமாவார்.

தகவல்:
**திருமதி மரியாப்பிள்ளை**

265, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(65687)

## தீவக கல்வி வலயத்துக்கு 14 எழுதுநர் நியமனம்

வேலணை, மே 13

தீவக கல்வி வலயத்திற்கு புதிதாக 14 எழுதுநர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதும் தற்போது 9 பேர் மட்டுமே கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர்.

கடமையைப் பொறுப்பேற்காத மிகுதி ஐவரின் பெயர் விவரமும் வருமாறு:-

சி. சிவாஸ்கரன் (புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறை.) கு. கிருபாகரமூர்த்தி (வாதரவத்தை, புத்தூர்.) செல்வி. ச. கிருஸ்ணவதனா (வைரவர் கடாட்சம், பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு. செல்வி. சி. சிவதர்சினி (19/1 ஸரான்லி வீதி, யாழ்ப்பாணம்.) செல்வி. சேபனா (பிறெமினி ஸ்ரீபன் (நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை.)

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கிடைக்காவிட்டாலும் தீவக கல்வி வலயப் பணிமனையில் கடமையைப் பொறுப்பேற்கலாம் என தீவக கல்வி வலய அதிகாரி தெரிவித்தார். [ஐ-167

## மிதி வெடிகளில் கால் நடைகள் சிக்குகின்றன

கோப்பாய், மே 13

கோப்பாய்ப் பகுதியில் மிதிவெடியில் சிக்கி கால் நடைகள் கால்களை இழக்கின்றன.

கடந்த 9 ஆம், 10 ஆம் திகதிகளில் கோப்பாய் சந்திக்கு அண்மையில் உள்ள காப்பரண் பகுதிக்கு மேய்ச்சலுக்குச் சென்ற மாடுகள் இரண்டு மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்துள்ளன பருத்தித்துறை வீதிக்குக் கிழக்கே உள்ள காப்பரண் பகுதியில் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் அகற்றப்படாமையாலேயே இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
(ஐ-72)

## மாற்றம்

வல்வெட்டித்துறை நகர சபையின் கீழ் இயங்கும் பொது நூலகம் மக்களின் நலன் கருதி, தினமும் மாலை 6 மணிவரையும் திறந்திருக்கும்.

முன்னர் தினமும் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையுமே இந் நூலகம் சேவையாற்றி வந்தது.

இனிமேல் காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை இந்நூலகம் திறந்திருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-]190)

## கருத்தரங்குத் தொடர்

கொழும்புத்துறை, மே 13

தேசிய கலை இலக்கியப் பேரவையினால் நடத்தப்படும் திறனாய்வு பற்றிய வாராந்த கருத்தரங்குத் தொடர் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர், கந்தையா ஸ்ரீ கணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'தமிழ்த் திறனாய்வில் பின் நவீனத்துவம்' எனும் பொருள் பற்றி பேராசிரியர் நா. சுப்பிரமணியன் கருத்துரைவழங்குவார்.
(ஐ ரி-30)

## விநியோகம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள இடம் பெயர்ந்தோருக்கான நிவாரண முத்திரைகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

அடுத்த மாதமளவில் அந்தந்தக் கிராம அலுவலர்கள் ஊடாக இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு அவை வழங்கப்படவுள்ளன.

பல மாதங்களாக நிவாரண முத்திரைக்குப் பதிலாக அனுமதிப் பத்திரங்கள் (பெர்மிட்) மூலம் உலர்உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆறு மாதங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய புள்ளிகள் முத்திரையில் உள்ளன.
(ஐ-117)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

13 - 05 - 1999



## திருமதி கணபதிப்பிள்ளை விசாலாட்சி

(கரம்பன் கிழக்கு)

இன்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும் எமது குடும்பத் தலைவியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

நந்நாவில் அம்மன் வீதி,
கோண்டாவில் மேற்கு.
(65692)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக உணவுத்திட்ட உதவியுடன்

# இவ்வாண்டு 30 குளங்களை புனரமைப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 13

உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் இந்த வருடம் 30 குளங்களும் 10 விவசாய வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக யாழ் கமநலசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்தார்.

சாவகச்சேரி, பளை மற்றும் கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணிப் பகுதிகளில் உள்ள குளங்கள் மற்றும் வீதிகளே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி குளங்களையும், வீதிகளையும் புனரமைப்புச் செய்ய அனுமதி கிடைத்துள்ளதாகவும் —

எதிர்வரும் ஜூலை மாதம் மேற்படி புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும்—

கமநல சேவைகள் உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ஐ 7)

## கூட்டுறவு ஊழியரின் கொடுப்பனவு மீளாய்வு

அரியாலை, மே 13

கூட்டுறவு ஊழியர்களின் சம்பள உயர்வு மற்றும் கொடுப்பனவுகள் சம்பந்தமான மீளாய்வுகள் கூட்டுறவுச் சங்கங்களில் இடம்பெற்று வருகின்றன.

புதிய சம்பளத் திட்டத்தின் பிரகாரம் கூட்டுறவுச் சங்கங்கள் சிலவற்றில் சம்பள கொடுப்பனவு சரியான முறையில் பின்பற்றப்படவில்லை என்று கூட்டுறவு ஊழியர்கள் சங்க நிர்வாகங்களுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இதே வேளை —

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவை மீளாய்வு செய்து வருகின்றது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாத மளவில் சம்பளத் திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படலாம் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

## 229 தபாற்பொதிகள் நேற்று வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், மே 13

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்த் தபால்கள் அடங்கிய 229 தபாற்பொதிகள் நேற்யைதினம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் யாழ். எடுத்து வரப்பட்டன.

இதேவேளை—

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சேகரிக்கப்பட்ட வெளியூர்த்தபால்கள் அடங்கிய 42 தபாற் பொதிகள் இதே கப்பல் மூலம் நேற்றைய தினம் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

நேற்று இங்கு எடுத்து வரப்பட்ட தபாற்பொதிகள் யாவும் இன்று முதல் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் எனவும் யாழ் பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார். (ஐ-7)

## வகுப்பறை கட்டடம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 13

ஊரெழு ஸ்ரீ கணேச வித்தியாசாலையில உள்ள வகுப்பறைக் கட்டடம் ஒன்று சகல வசதிகளும் கொண்ட கட்டடமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தத்தின்கீழ் மாணவர்கள் செயன்முறை ரீதியாக கற்கை நெறியைப் பின்பற்றுவதற்குரிய வசதிகளுடன் கூடியதாக வகுப்பறை புனரமைக்கப்பட்டு வருவதாக மேற்படி பாடசாலையின் அபிவிருத்திச் சங்க செயலாளர் ந. து. ஜெயதீஸ்வரன் தெரிவித்தார். (ஐ-7)

## ஆசிரிய ஆலோசகர் பதவிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவு

வலிகாமம் தெற்கு, மே 13

பாடசாலைகளில் செயற்றிட்ட அமுலாக்கலை மேற்பார்வை செய்தல், கண்காணிப்பு செய்தல் ஆகியவை தொடர்பாக பிரதேச செயலர் பிரிவு, வலய நிலை ஆகிய மட்டங்களில் பாடங்களின் முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு ஆசிரிய ஆலோசகர் பதவிகளின் எண்ணிக்கைகள் அதிகரிக்கப்பட உள்ளன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நியமிக்கப்படும் ஆசிரிய ஆலோசகர்கள் அதே செயலர் பிரிவில் கடமையாற்றுவர்.

வலயத்துக்கென நியமிக்கப்படு வர்கள் வலயத்துக்கு உட்படும் எல்லா பிரதேச செயலர் பிரிவுப் பாடசாலைகளிலும் கடமை புரிவதற்கென நியமிக்கப்படுவர்.

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 13 ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சங்கானை, சண்டிலிப்பாய் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு தலா ஒவ்வொரு பதவிவெற்றிடங்களும் —

கணித பாடத்துக்கு தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலர் பிரிவிலும், விஞ்ஞான பாடத்துக்கு சங்கானை, தெல்லிப்பழை பிரதேசசெயலர் பிரிவுகளிலும்— சமூகக்கல்வி, கிறிஸ்தவ பாடங்களுக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும் இந்துசமய பாடத்துக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலும் தலா ஒவ்வொரு வெற்றிடங்களும் உள்ளன.

வலிகாமம் கல்வி வலயத்தில் உடற்கல்வியும் சுகாதாரமும், மனையியல், விவசாயம், வர்த்தகம், தொழில் நுட்பத்திறன் சித்திரம், சங்கீதம், நடனம், வாழ்க்கைத் தேர்ச்சி, முறைசாராக் கல்வி வளர்ந்தோர் கல்வி ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர்பதவிகளுக்குவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (ஐ-152)

## 20 ஆயிரம் தென்னை நாற்று 'மாஹோ' கப்பலில் வரும்

யாழ்ப்பாணம், மே 13

யாழ். குடாநாட்டில் தெங்குப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் வகையில் 20 ஆயிரம் நல்லின தென்னம் நாற்றுக்கள் யாழ். எடுத்து வரப்படவுள்ளதாக கமநல சேவைகள்திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்தார்.

அடுத்த வாரமளவில் பருத்தித்துறை வந்து சேரும் 'மாஹோ' கப்பலில் மேற்படி தென்னம் நாற்றுக்கள் எடுத்து வரப்படுவதாகவும் —

நாற்றுக்கள் யாவும் வந்து சேர்ந்ததுடன் அவை யாவும் புத்தூர் பகுதியில் நாற்று மேடை போடப்பட்டு பின்னர் உரியவர்களுக்கு வழங்கப்படும் எனவும் —

அவர் மேலும் தெரிவித்தார். (ஐ -7)

பளை ஆஸ்பத்திரியில்

## இரு தினங்கள் மட்டுமே பற்சிகிச்சை அளிக்க வசதி

தென்மராட்சி, மே 13

பளை வைத்தியசாலையில் தினமும் நடைபெற்று வந்த பற்சிகிச்சைப் பிரிவு இனிமேல் வாரத்தில் இருதினங்கள் மட்டும் இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நவீன வசதிகள் கொண்ட பற்சிகிச்சை மண்டபம் பளை ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றிற்கான கருவிகள் இன்னும் வந்து சேரவில்லை. இதனால் இங்கு கடமையாற்றிய பற்சிகிச்சை நிபுணர் வாரத்தில் செவ்வாய், சனி ஆகிய தினங்களில் பளை ஆஸ்பத்திரியிலும், ஞாயிறுதவிர்ந்தஏனைய நாள்களில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் கடமையாற்றுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பளை ஆஸ்பத்திரியில் பற்சிகிச்சைப் பிரிவுக்கென எட்டு லட்சம் ரூபா செலவில் நவீன வசதிகள் கொண்ட புதிய கட்டடம் அமைக்கப்பட்டு ஆறு மாதமாகியும் உரிய கருவிகள் வந்து சேராததால் இன்னும் புதிய கட்டடம் திறக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## கந்தபுராண படிப்பு

தென்புலோலி உபய கதிர்காம முருகன் ஆலயத்தில் கந்தபுராண படிப்பு இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து தினந்தோறும் நடைபெறும் இப்புராணப் படிப்பு அடுத்தமாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வள்ளி திருமணப் படலப் படிப்புடன் பூர்த்தியடையும். (ஐ-173)

## கால்நடை ஆஸ்பத்திரியில் ஆளணிப் பற்றாக்குறை

கொழும்புத்துறை மே 13

யாழ். நாவலர் வீதியில் உள்ள கால்நடை வைத்தியசாலையில் ஆளணிப்பற்றாக்குறையை அடுத்து சேவைகளை விரிவாகச் செய்ய முடியாது உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு நான்கு வெளிக்கள உத்தியோகத்தர்கள் சேவை செய்து வந்தனர்.

தற்போது இப்பணிமனையில் ஒரே ஒரு வெளிக்கள உத்தியோகத்தர் மட்டுமே பணியாற்றி வருகிறார்.

இதனால் இப்பணிமனையின் சேவைகளை கிராமமட்டத்தில் விரிவாகச் செய்ய முடியாது உள்ளதாகத் தெரியவருகிறது

நீண்டகாலமாக இப்பதவிகள் நிரப்பப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-30)

## வகுப்பறை அமைப்பு

தென்மராட்சி, மே 13

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மிருசுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, குடமியன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றில் வகுப்பறைகள் அமைக்கப்படவுள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினர் வகுப்பறைகள் அமைப்பதற்கு தலா ஐந்து லட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ - 117)

## நெடுந்தீவுக்கு அதிகாரிகள் குழு

'கெயர்' தாபனம் விவசாயத்திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் குழு நாளை வெள்ளிக்கிழமை நெடுந்தீவுக்கு விஜயம் செய்து அங்கு விவசாய நடவடிக்கைகள் குறித்து ஆராயவுள்ளது. (ஐ 111)

## கருத்தரங்கு

யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடத்தப்படவிருக்கும் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புபவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் நல்லாயன் அலுவலகத்தில் பெயர்களைப் பதியுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

# செய்திக் கொத்து

### போட்டி முடிவு

தென்மராட்சி, மே 13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற இறுதி மெய்வன்மைப் போட்டிகளில் தரம் ii பாடசாலைகளுக்கான போட்டிகளில் கச்சாய் அ. த. க. பாடசாலை முதலிடத்தையும், நாவற்குழி மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தையும், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றன. (க-127)

### நெடுந்தீவில் உதவிப்பணம்

யாழ்ப்பாணம், மே 13

நெடுந்தீவில் மாதாந்த பொதுசன உதவிப்பணம் பெறுபவர்களுக்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவு நெடுந்தீவு தபாலகத்தினூடாகவும், ஏனைய இரு உப தபாலகங்களூடாகவும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

### மிதி வெடியில் அகப்பட்ட மாடு

வலி வடக்கு, மே 13

அண்மையில் ஆனந்தன் வடலி வீதியில் மிதி வெடியில் அகப்பட்டு மாடு ஒன்று முன்னைய காலை இழந்தது.

அரியாலை மத்தியில் ஆனந்தன் வடலி வீதியில் சுமார் 150 யார் பகுதி போக்கு வரத்துக்குத்தடை செய்யப்பட்டுள்ளன.

இப்பகுதியில் மேய்ச்சலுக்குச் செல்லும் கால்நடைகள் அடிக்கடி மிதி வெடியில் அகப்பட்டு கால்களை இழந்து வருகின்றன. (ஐ-86)

### 6 எழுதுநர் நியமனம்

நெடுந்தீவு, மே 13

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு ஆறு பேர் எழுதுவினைஞர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-111)

### கடமை ஏற்பு

தென்மராட்சி மே 13

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் இயங்கும் மார்புநோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு வைத்திய அதிகாரி ஒருவர் கடமையேற்றுள்ளார். (க)

### கணனி மூலம் பணிகள் ஆரம்பம்

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்துக்கு வழங்கப்பட்ட கணனி இயந்திரம் சம்பிரதாய பூர்வமாக இயக்கி வைக்கப்பட்டது.

பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் அதிபர் யேசுதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ் வலய கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை கணனி இயந்திரத்தை இயக்கி பணிகளை ஆரம்பித்து வைத்தார். (ஐ-17)

### நல்லைக்குமரன் மலர்

யாழ்ப்பாணம், மே 13

நல்லூர் உற்சவகாலத்தில் வருடா வருடம் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலரை வெளிடுவதற்கான முன்னேற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-15)

### சிறுவர் விளையாட்டு போட்டி

மட்டுவில் வடக்கு கிருஷ்ணா மழலைகள் பூங்கா சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் கடந்த ஞாயிறு மட்டுவில் வேற்பிள்ளை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே. அருணந்தியும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் அ. பொ. செல்லையாவும் கலந்து கொண்டனர். (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பு



## செல்வி நிதர்ஷினி ஸ்ரீதரன்

[ 13 – 05 – 1999 ]

பிரான்ஸ் குசன்பில் பகுதியை வதிவிடமாகவும், யாழ்ப்பாணம், நல்லூர், 18/1, மூத்த விநாயகர் வீதியைச் சொந்த இடமாகவும் கொண்ட ஸ்ரீதரன்-கமலகுமாரி குடும்பத்தினரின் பாசமிகு மகளும், எனது பேர மகளுமான செல்வி நிதர்ஷினி [நிதா] 12 — 02 — 1999 வெள்ளிக்கிழமை பிரான்சில் அகால மரணமுற்ற செய்தி கேட்டு எம்மிடமும், பிரான்சிலுள்ள எமது குடும்பத்தினரிடமும் அனுதாபம் தெரிவித்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்று 13—05—1999 வியாழக்கிழமை எமது பேர மகளின் அந்தியேட்டிக் கிரியைகள் பிரான்சில் நடைபெறும்போது இங்கும் நாம் அவருக்காகச் செய்யும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சபாபதி சிவலிங்கமும்,
குடும்பத்தினரும்.

நல்லூர், யாழ்ப்பாணம்.

[65680]

## பன்னாலை மகளிர் சங்கம்

வலிகாமம் தெற்கு மே 13

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள பன்னாலை மகளிர் சங்கம் வடக்கு — கிழக்கு மாகாணசபை கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-152)

## கோழிகளுக்கு மருந்து

தென்மராட்சி, மே 13

தென்மராட்சிப் பிரதேசத்தில் கோழிகளுக்கு கொள்ளை நோய் வேகமாகப் பரவுவதை அடுத்து கொள்ளை நோய் தடுப்பு மருந்து சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்திற்கு வந்துள்ளது.

கோழி வளர்ப்போர் பிரதி புதன்கிழமை தோறும் கொள்ளைநோய் தடுப்பு மருந்தினைப் பெற்றுக் கொள்ளலாமெனவும், தண்ணீரில் கலந்து கொடுக்கக் கூடிய இந்த தடுப்புமருந்தைப் பெற்றுக்கொள்ள ஒரு சிறிய போத்தல் ஒன்று கொண்டு வருமாறும் சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார்.

[ஐ-117]

## சத்துணவு மையம்

குருநகர், மே 13

நாவாந்துறையில் சத்துணவுமையம் யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினரால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நாவாந்துறை நாவலர் வீதியில் அமைந்துள்ள இச்சத்துணவு மையத்தில் ஐந்து வயதுக்குட்பட்ட சுமார் நூறு குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. (ஐ-51)

### அளவெட்டிப் பகுதியில்

## மரங்களை ஏற்றிச் சென்ற பலர் பிடிபட்டனர்

அளவெட்டி, மே. 13

மரக்கூட்டுத்தாபனத்தின் அனுமதிக் கடிதம் இன்றி மரங்களை வெட்டிச் செல்வோர் படையினரிடம் வசமாக மாட்டிக்கொள்ளும் சம்பவங்கள் அளவெட்டிப் பகுதியில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.

இளவாலை, பெரியவிளான், மாதகல், அளவெட்டி ஆகிய பகுதிகளில் மரங்களைத் தறிப்போர், வீதியில் வாகனங்களில் ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் இல்லாமல் செல்லும்போதே, அளவெட்டிப் பகுதி சோதனைச் சாவடிகளில் வைத்து, படையினரால் மரங்கள் விறகுகள் என்பன பறிமுதல் செய்யப்படுகின்றன.

மரங்களைத் தறிப்பதற்கு அந்தந்தப் பகுதி கிராம சேவை அலுவலர்களிடம் விண்ணப்பித்து, பிரதேச செயலரின் மேலொப்பமிடப்பட்டு, யாழ்ப்பாணத்திலுள்ள மரக் கூட்டுத்தாபனத்திடம் அனுமதிக் கடிதம் பெறப்பட்டே மரங்கள் விறகுகள் கொண்டு செல்லப்படல் வேண்டும் என்ற நடைமுறையிலுள்ள விதிகளைப் பின்பற்றுமாறு அளவெட்டி இராணுவமுகாம் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ-13)

## கோப்பாய்-கைதடி வீதியில் பயணக் கட்டுப்பாடு

அளவெட்டி, மே 13

கோப்பாய்-கைதடி ஊடாக சாவகச்சேரிக்குச் செல்லும் வீதி திறந்து விடப்பட்டுள்ள போதிலும் இ. போ. ச. பஸ் வண்டியை தவிர, ஏனைய தனியார் வாகனங்கள் இவ் வீதியூடாகச் செல்வற்கு, அனுமதி பெறவேண்டி உள்ளது.

நீண்ட காலமாக மூடப்பட்டு கிடந்த இவ்வீதி அண்மையில் பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டது. இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டி சாவகச்சேரி வரை அதன் சேவையை இவ்வீதி ஊடாக மேற்கொண்டு வருகின்றது.

தனியார் வாகனங்கள் சைக்கிள்கள் மோட்டார் சைக்கிள்கள் என்பன இப் பாதை ஊடாக பயணம் செய்ய வேண்டுமாயின், சாவகச்சேரிப் பகுதிப் படையினரிடம் பாஸ் பெற்று வருமாறு கைதடிப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

இதனால் பொதுமக்கள் நாவற்குழி, யாழ்ப்பாணம் பாதை வழியாகவே தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது. (ஐ-13)


உ

ஏழாலை கிழக்கு

## அருள்மிகு பேத்தி அம்மன் ஆலயம் மண்டல பூர்த்திப் பெருவிழா

நாள்: 14 - 05 - 1999 வெள்ளிக்கிழமை

நேரம்: பகல் 11.00 மணி சங்காபிஷேகம்
12 00 மணிக்கு அன்னதானம் இடம்பெறும்.

பிரதம குரு:
சிவஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள்
(புன்னாலைக்கட்டுவன்)

அனைவரும் கலந்து அம்பிகை அருள்பெறுக.

இங்ஙனம்
உபயகாரர்.

(65673)


வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

## பண்டத்தரிப்பு பட்டின / கிராம உப அலுவலக இறைச்சிக் கடைகள்

# கேள்வி அறிவித்தல் - 1999

1) குத்தகைக்காலம்: 01 - 06 - 1999 தொடக்கம் 31 - 12 - 1999 வரை
2) கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 18 - 05 - 1999 நண்பகல் 12. 00 மணிவரை பண்டத்தரிப்பு பட்டின/ கிராம உப அலுவலகத்தில்
3) கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 19 - 05 - 1999 நண்பகல் 12. 00 மணிவரை
4) கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி: 19 - 05 - 1999 பிற்பகல் 2. 00 மணி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் தலைமை அலுவலகத்தில்
5) கேள்விப்பத்திரங்கள், பண்டத்தரிப்பு பட்டின/ கிராம உப அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
6) நிர்ணயிக்கப்பட்ட தொகையிலும் பார்க்கக் குறைவாகச் சமர்ப்பிக்கப்படும் கேள்விகளின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக் கப்பட்ட பணம் |
|---|---|---|---|---|---|
| பண்டத்தரிப்பு பட்டினம் | | | | | |
| 1) | மாட்டிறைச்சிக்கடை | 250/- | 1000/- | 100/- | 12,000/- |
| 2) | ஆட்டிறைச்சிக்கடை | 250/- | 1000/- | 100/- | 5,000/- |
| 3) | கருவாட்டுக்கடை | 250/- | 1000/- | 100/- | 5,500/- |
| 4) | கருவாட்டுக்கடை | 250/- | 1000/- | 100/- | 5,500/- |
| பண்டத்தரிப்பு இராமம் மாசியப்பிட்டி சந்தை | | | | | |
| 1) | மாட்டிறைச்சிக்கடை | 250/- | 1000/- | 100/- | 5,000/- |
| 2) | ஆட்டிறைச்சிக்கடை | 250/- | 1000/- | 100/- | 2,500/- |

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்,
ஜே. பி யூ எம்.
தலைவர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய்.
11 - 05 - 1999

[இ/7512]

உ

சிவமயம்

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 — 12 — 1944



உதிர்வு 24 — 04 — 1998

''அன்பே சிவம்''

அமரர்

## வி. எஸ். மகேந்திரன்

[முன்னாள் வேலை மேற்பார்வையாளர்]

திதி: சித்திரை திரயோதசி

ஆண்டொன்று சென்றதையா
ஆறவில்லை எம் துயரம்
மாண்ட கதை மறந்ததையா
மலர் முகமே தெரியுதையா
மீண்டு இங்கு வாருமையா
விழித்தெமை பாருமையா.

ஆத்மசாந்தியடையப் பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்

14/7, ஆடியம்பிட்டி ஒழுங்கை,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

[65650]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வஞ்சம் தீராதீர்!

இடம் பெயர்ந்த மக்களைக் குறுகிய கண்ணோட்டத்துடன் நோக்காதீர்கள். அவர்களை மனித நேயத்துடன் நோக்க வேண்டும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும்.

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தநாடாளுமன்ற உறுப்பினர் கே. பி சில்வா சபையில் பேசுகையில் கேட்டிருக்கிறார்.

இடம்பெயர்ந்த மக்களை, அகதிகளை அரசாங்கம் மனித நேயத்துடன் நோக்கி, அவர்களையும் தனது பிரஜைகளாகக் கருதி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அவர்களுக்குரிய உணவு, மருந்து மற்றும் அத்தியாவசிய சேவைகளைச் செய்வதில் தடைகள், தடங்கல்கள் போடக்கூடாது என்று இப்பத்தியில் அடிக்கடி எழுதி வருகிறோம்.

கம்யூனிஸ்ட்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரின்— அரசாங்கத் தரப்பு எம். பி. யின் — உரை அரசாங்கம் இடம்பெயர்ந்த மக்களை மனித நேயத்துடன்நோக்க வில்லை. என்பதனையும் அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் குறுகிய எண்ணத்துடன் செயற்பட்டு வருகிறது என்பதனையும் ஊர்ஜிதம் செய்வதாக உள்ளது.

ஆகையால், இடம் பெயர்ந்த மக்களின் - வடக்கு — கிழக்கு அகதிகளின் — தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அரசு தடைகள். தடங்கல்கள் போடுவதில்லை. அகதிகளின் பிரச்சினையை அக்கறையுடைய ஒரு சாரார் மிகைப்படுத்திக் கூறுகிறார்கள் என்று சொல்லி அரசு சமாளிக்க முனையக் கூடாது.

ஆளுந்தரப்பு எம். பி ஒருவரே மனிதநேயத்தின் பேரால் இடம்பெயர்ந்தோருக்கு உதவுமாறு கேட்டதை மனதில் கொண்டாவது—

அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் அகதி மக்கள் எந்தளவுக்கு பாதிக்கப்படுகிறார்கள் என்பதனை இனியாவது உணர்ந்து, கவனத்தில் கொண்டு —

புள்ளி விவரங்களைக் காட்டி குறுகிய நோக்கத்தை அடைய நினைக்காது—

அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வர வேண்டும்.

அவர் கேட்பது போன்று வன்னிப் பகுதிக்கு எவ்வித தட்டுப்பாடுமின்றி உணவுப்பொருள்களையும் எரிபொருள்கள் போன்ற ஏனையவற்றையும் அனுப்பி வைக்க வேண்டும் மக்களுக்கு அனுப்பப்படும் பொருள்கள் விடுதலைப் புலிகளின் கைக்குப் போய்ச் சேர்வதாகக் கூறிக் கொண்டு, தமிழ் அகதி மக்கள் மீது வஞ்சம் தீர்க்கக்கூடாது.

மேலும் போரில் வெல்லப் போகிறோம் என்று கூறிக்கொண்டே. போரைத் தொடரும் போக்கைமாற்றி அதனை நிறுத்தி, சமாதானப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு ஒன்றைக் காண நேர்மையுடன் செயற்பட வேண்டும்.

போர் என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டு. பதவிக் காலத்தைக் கழிக்கவும், களிக்கவும் நினைக்கக்கூடாது. பதவிக்கு வருவதற்காக தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை மறக்காது செயற்பட மனங்கொள்வதே நல்லது.

# பாடசாலை மட்டக் கணிப்பீடு முறை மாணவரின் ஆளுமை வளர உதவும்

19-01-99 ஆம் திகதிய உதயனில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறை கல்வி விருத்திக்கு எந்தளவு உதவும் என்ற தொனியில் முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் எழுதியிருந்தார். அக் கட்டுரையில் எழுப்பப்பட்ட சில பிரச்சினைகள் குறித்து இங்கு ஆராயலாம்.

அக்கட்டுரையில் முன்வைக்கப்பட்ட பிரதான பிரச்சினைகளாக —

(I) பா. ம. க. முறையினால் மீத்திறன் மாணவர்கள் பாதிப்பு அடைவர்.

(II) குறைந்த தேர்ச்சி மட்டம் பா. ம. க. நிர்ணயிக்கப் பட்டிருப்பதினால் பொதுப் பரீட்சைகளில் இக்கணிப்பீட்டு முறையினால் மாணவர்கள் பாதிக்கப்படுவர்.

(III) பா. ம. க. முறையில் 18 பண்புகளை அவதானிக்கவும், கணிப்பிடவும் அதனை விருத்தி செய்யவும் ஒரு ஆசிரியரால் முடியுமா?

(IV) ஆய்வுக்குட்படுத்திய ஆசிரியர்கள் இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

## இப்போதைய கற்றல், கற்பித்தல் முறைகளில் மாற்றம் தேவை

மேற்கூறிய பிரச்சினைகளுக்கு எனது பார்வையை விளக்குவதற்கு முன்னர் பா. ம. க. முறைபற்றி சிறிய அறிமுகம் ஒன்றினைக் கூறலாம் எனக் கருதுகின்றேன்.

பா. ம. க. முறையானது 1996 ஆம் ஆண்டு முதல் தேசிய கல்வி நிறுவனத்தின் (National Insitute of Education) மதிப்பீட்டுத் துறையினரின் அனுசரணையுடன் மாத்தறை மாவட்டத்திலுள்ள சில பாடசாலைகளில் தரம் 6 இல் ஒரு முன்னோடித் திட்டமாக அமுல்படுத்தப்பட்டது. கிராமப்புறம், நகர்ப்புறம் மற்றும் பல்வேறு பண்புகளைக் கொண்ட பாடசாலைகளிலும் பரீட்சார்த்தமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மொனராகலை, பலாங்கொடை போன்ற பிரதேசங்களிலும் இது நடைமுறைப் படுத்தப்பட்டது.

இம் முன்னோடித் திட்டத்தில் பெற்ற அனுபவங்கள் விஞ்ஞான ரீதியாகவும், புள்ளி விவர ரீதியாகவும் இலங்கைப் பாடசாலைகளுக்குப் பொருத்தமான திட்டமா என்று இனங் காணப்பட்டது. இதற்கென இலங்கை மதிப்பீட்டுத் திணைக்களத்தில் நீண்ட காலம் பணியாற்றி அனுபவம் பெற்ற ஆதர் ஸி வெதமுல்ல பொறுப்பாக நியமிக்கப்பட்டார். (அவரே இலங்கையில் இத் திட்டத்தின் சிற்பிகளில் ஒருவர்)

அவரின் வழிகாட்டலின் கீழ் 1997 ஆம் ஆண்டு முதல் மேல் மாகாணத்திலும் வடமேல் மாகாணத்திலும் பெரும்பாலான பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இம் மாகாணங்களில் பா. ம. க. இன்று தரம் 9 இல் அறிமுகப் படுத்தக் கூடிய நிலையை எட்டியுள்ளது.

1998 ஆம் ஆண்டில் இருந்து முன்னோடித் திட்டத்தின் பலாபலன்களை விஞ்ஞான பூர்வ ஆய்வுக்குட்படுத்திய பின்னர் நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டது. எனவே பா. ம. க. முறை அவசர அவசர கோலத்தில் செய்யப்பட்ட ஒன்றல்ல என்பது இதில் இருந்து தெரியவருகின்றது.

### வெறும் மதிப்பீடு அல்ல

இனிக் கட்டுரையாசிரியரினால்முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு வருவோம். அவர் பெரும்பாலும் தனது கட்டுரையில் பா. ம. க. என்பது மதிப்பீட்டு நுட்பம் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டது என்றும், மதிப்பீட்டு முறையில் மாற்றம் ஒன்றினைக் கொண்டு வரும் செயற்றிட்டம் என்ற வகையிலேயே பல பிரச்சினைகளை முன்வைத்துள்ளார்.

அதாவது மீத்திறன் மாணவர்களுக்குப் பொருந்தாது ஆசிரியர்களுக்கு மதிப்பீட்டுப் பளு, பொதுப் பரீட்சைக்கு தோற்றும் பிள்ளைகளுக்கு பாதகம், 18 பண்புகளை அளவிடுவது கடினம் என்ற வகையில் மதிப்பீடு சார்ந்த பிரச்சினைகளையே அதிகம் கவனத்தில் எடுத்துள்ளார்.

ஆனால் பா. ம. க. மு. என்பது வெறுமனே மதிப்பீட்டு முறையில் ஏற்படும் மாற்றத்தினைக்கருதவில்லை. அது கற்றல், கற்பித்தல், மதிப்பீடு என்ற மூன்றிலும் ஒருவினைத்திறனை அதிகரிக்கும் திட்டமாகும் கற்றல். கற்பித்தல். மதிப்பீடு என்பன ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த செயற்பாடு என்பதினை அது அடிப்படையில் கொண்டுள்ளது.

பா. ம. க முறையில் ஒருவர் தான் கற்பிக்கும் முறையை, கற்கும் முறையை. மதிப்பிடும் முறையை மாற்றுதல்வேண்டும். உதாரணமாக மதிப்பீட்டுமுறையைஎடுத்துக் கொண்டால் ஒப்படை, முறைசெயன் முறைத்தேர்வு, செவ்வைபார்த்தல், அவதானிப்பு முறை வாய் மூலப் பரீட்சை, எழுத்துப்பரீட்சை போன்ற பல்வேறு கணிப்பீட்டு முறைகளுக்கு அடிக்கடி உட்படுத்தி ஆளுமையை வளர்க்க வேண்டும். மேலும் கற்பித்தலின் போதும் கற்றலின் போதும் கூட மேற்படி கருவிகளைக்கையாள முடியும். இக் காரணங்களினால பா. ம. க. முறை கற்றல். கற்பித்தல் மதிப்பீடு என்பனவற்றில் ஏற்படும் ஒரு மாற்றமாகப் பார்க்கப்பட வேண்டுமே அன்றி மதிப்பீட்டு முறையில் காணப்படும் ஒரு பக்கமாகப் பார்க்கக் கூடாது

இனி பா. ம. க. மீத்திறன் மாணவர்களுக்குப் போதாது எனவும் இதில் தேர்ச்சி மட்டம் குறைவாகவே காணப்படுகின்றது எனவும் கூறப்பட்டது. தற்போது இருக்கும் ஆசிரியர் மையக்கல்வி முறையிலும் அறிவு சார் திறன்களை மட்டும் மதிப்பிடும் பரீட்சை முறையிலும் எத்தனை வீதமான மீத்திறன் மாணவர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர்? அறிவுசார் திறன்களில் மீத்திற மாணவர் தவிர ஏனைய அறிதல் ஆட்சிதிறன்கள்சாரா மீத்திறன் மாணவர்களுக்கு தற்போதுள்ள முறை பொருத்தமானதா? பா. ம. க. முறையில் எல்லாத் திறன் வளர்த்தெடுக்கப்படுவதற்காக கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டு முறைகள் அடங்கியுள்ளன. மேலும் ஒரு சில மீத்திற மாணவர்களுக்காக நிறைய அறிவுசார் விடயங்களைப் புகட்டுவதற்குப் பதிலாக நிறைய மாணவர்களுக்காக குறைந்த அளவான விடயங்களை முன் வைப்பதன் மூலம் தேர்ச்சி மட்டத்தினை உயர்த்த முடியும்.

பா. ம. க. இடை நிலைப் பாட விதான சீர்திருத்தமாகவே தற்போது முன்வைக்கப்பட்டுள்ளது. இடைநிலை வகுப்புக்களில் மீத்திற மாணவர்கள் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் குறைவு. அத்தகைய மாணவர்களுக்கு தற்போது உயர்நிலை வகுப்புக்களின் மீத்திற நிலையை வெளிப்படுத்த நுண்மதி சோதனைகளுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

முன்னைய மதிப்பீட்டு முறையில் ஆசிரியரால் மதிப்பீட்டு நோக்கங்கள் திட்டமிடப்படாமலே பரீட்சைகள் நடத்தப்பட்டன. ஆனால் பா. ம. க. முறையில் மதிப்பீடு ஒன்றினை ஆசிரியர் நடத்த முன்னர் மதிப்பீட்டு நோக்கங்களைத் திட்டமிடுவதுடன் 81 புள்ளிகளுக்கு மேல் பெற்றவரே தேர்ச்சியடைந்தவர் என்றவொரு உயர்ந்த தேர்ச்சி மட்டமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே எந்த வகையில் பார்த்தாலும் பா. ம. க. மாணவர் மைய முறையில் கற்றல் கற்பித்தல் மதிப்பீடு தீர்மானிக்கப்பட்டுள்ளதனைக்காணமுடியும்.

### பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள்

இனிப் பொதுப் பரீட்சைகளில் தோற்றுவதற்கு பா. ம. க. முறையினால் பாதிப்பு ஏற்படும் என்ற கருத்தும் கட்டுரையில் விரவி இருந்தது. கடந்த $1\frac{1}{2}$ தசாப்தங்களாக க. பொ. த. சாதாரண தர பரீட்சை அடைவு மட்டங்களை அவதானிக்கும் ஒருவருக்கு தற்போதைய கற்றல், கற்பித்தல் மதிப்பீடு என்பனவற்றின் சாதனைகள் எவை என்பது நன்கு புரியும். 1997 டிசெம்பர் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் 22,28 பேர் ஒரு பாடத்திலேனும் சித்தியடையவில்லை 1995 டிசெம்பர் க. பொ. த. (சா / த) பரீட்சையில் 49,696 பேர் 8 பாடங்களிலும் சித்தியடையவில்லை. இது 10 சதவீதமானோரைக் குறிக்கின்றது. கடந்த சில ஆண்டுகளாக க. பொ. த. (சா / த) பரீட்சையில் 20 சத வீதமானோரே சித்தியடைந்து வருகின்றனர்.

கடந்த 13 வருட காலத்தில் 5 வருட ஆரம்பக்கல்வியினை முடித்தவர்களிடையே தேசியக்கல்வி நிறுவனம் நடத்திய ஆய்வில் —

அவர்களில் —

வாசிக்கத் தெரிந்தவர்கள் — 21%

கணித அளவீட்டில் — 13%

வாழ்க்கைத்திறனில் — 20%

தகுதிபெற்று இருந்தனர்.

இதிலிருந்து புலப்படுவது யாதெனின், தற்போதைய கற்றல், கற்பித்தலில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதே மிகுந்த அவதானத்தின் பின்னர் அநேகம் பேர் சித்தியடையவும் தொழில் உலகொன்றில் பொருந்திக் கொள்ளவும் ஏற்ற வகையில் பா. ம. க. திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

பா. ம. க. முறையில் 18 மனவெழுச்சிப் பண்புகளை அவதானித்து அவற்றினை

(9 ஆம் பக்கம் பார்க்க)

**ஏ. சி. ஜோர்ஜ்**
[B A Hons]
(கணித, விஞ்ஞான வள நிலையம்,
யாழ் இந்துமகளிர்கல்லூரி)


### நாளை

சித்திரை 31
வெள்ளிக்கிழமை
திதி: சதுர்த்தசி
முன் இரவு 8.44 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
பிற்பகல் 1.39 வரை.
சுபநேரம்: 5.53 - 7.23
ராகுகாலம்: 10.23 - 11.53
[பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி]

### உதயவாக்கு

கடவுள் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல

குன்றக்குடி அடிகளார்



### சாயி சிந்தனை


காமம், மோகம், குரோதம், லோபம் போன்ற கெட்ட குணங்கள்தாம் நம்மைத் துன்புறுத்துகின்றன. இவற்றை அழிக்க வேண்டும் என்று திரும்பத் திரும்பச் சொல்லிப் பயனில்லை. நல்லதோ, கெட்டதோ கடவுளிடம் சமர்ப்பித்து விட்டால் அவர் அதை நல்லதாக்கிப் பிரசாதமாக நமக்கு அளித்து விடுவார். ஒரு நூறு ரூபா நோட்டு அழுக்காகி சிறிது கிழிந்து, கசங்கி இருக்கிறது. அதை யாரிடம் கொடுத்தாலும் வாங்கிக்கொள்ள மாட்டார்கள். அதையே ரிசர்வ் வங்கியில் கொடுத்தால், புத்தம் புதிய பத்து ரூபா நோட்டுக்கள் பதிலாகக் கிடைக்கும். கடவுள் தான் ஆன்மீக உலகின் மிகப்பெரிய வங்கியின் தலைவர்.

உனது உணர்ச்சிகள் எல்லாவற்றையும் அவருக்கு அளித்து விடு அவர் நல்லதாக்கி அவற்றைத் திரும்பத் தருவார். உனக்குக் கெடுதல் நேரிட்டு இருக்கலாம் ஆனாலும் அவை நல்லவையாகவே முடியும். முடிவில் நமக்கு நல்லது ஏற்பட வேண்டும் என்பதையே கடவுள் விரும்புவார். அவர் நமது இரட்சகர் அல்லவா? இந்த உடல், மனம், புத்தி புலன்கள், சித்தம் யாவுமே அவர் தந்து அருளியவை. அவற்றைத் தூய்மையுடன் அவருக்கு அர்ப்பணியுங்கள். அவர் தந்த பரிசில்களை அவருக்கே சமர்ப்பித்து விடுங்கள் பதிலுக்கு அவர் நமக்குத் தரும் பிரசாதம் நிச்சயமாக அருமையானதாகவே இருக்கும்.

(நன்றி: ஞானபூமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் நாளை ஆரம்பமாகின்றது



லண்டன், மே 13

உலகில் கிரிக்கெட் விளையாட்டில் முன்னணியில் திகழும் 12 நாடுகள் பங்குபற்றும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இங்கிலாந்தில் நாளை கோலாகலமாக ஆரம்பமாகிறது.

இங்கிலாந்தில் உள்ள 21 மைதானங்களில் நாளை முதல் எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தப் போட்டிக்கான ஏற்பாடுகள் முடிவடைந்துள்ளன.

இந்தப் போட்டியை நேரிலும், தொலைக்காட்சி மூலமும் கண்டுகளிக்க உலகெங்கும் கோடிக்கணக்கான ரசிகர்கள் தயாராக உள்ளனர். பல நாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் ஏற்கனவே இங்கிலாந்தை வந்தடைந்துள்ளனர்.

முதற்சுற்றுப் போட்டி நாளை முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நடைபெறும்.

இங்கிலாந்து, இந்தியா, கென்யா, தென்னாபிரிக்கா, இலங்கை, சிம்பாப்வே ஆகிய நாடுகள் 'ஏ' அணியிலும் (Group A) —

ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், நியூசிலாந்து, பாகிஸ்தான், ஸ்கொட்லாந்து, மேற்கிந்தியத்தீவுகள் ஆகியன 'பி' அணியிலும் (Group B) —

விளையாட உள்ளன.

முதலாவது ஆட்டம் நாளை லோட்ஸ் மைதானத்தில் (Lord's) நடைபெறும். இங்கிலாந்து, இலங்கை அணிகள் இந்த முதல் ஆட்டத்தில் மோத உள்ளன. இறுதி ஆட்டமும் இதே மைதானத்தில் ஜூன் 20 ஆம் திகதி நடைபெறும்.

கடந்த 1996 இல் நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி கிண்ணத்தைச் சுவீகரித்தமை தெரிந்ததே. (ஐ)

# மொழிபெயர்ப்பாளராக பட்டதாரிகள் நியமனம்

கொழும்பு, மே 13

நீதி அரசியல் இனவிவகார தேசிய இணக்கப்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் அரச கருமமொழி திணைக்களத்தில் பணிபுரிய வென 800 பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இவர்கள் பயிற்சி மொழி பெயர்ப்பாளர்களாக அமர்த்தப்படுவார்கள் என்றும்—

நாட்டின் ஒவ்வொரு பிராந்தியத்தையும் இனத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பட்டதாரிகள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும —

இந்த மாதம் 17 ஆம் திகதி இவர்கள் கடமையாற்றத் தொடங்குவார்கள் என்றும்— அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் ஆரம்ப விழாவும்பயிற்சிப் பாடநெறியும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

பயிற்சிநெறியின் ஆரம்பக் கட்டம் மூன்று நாள்களுக்கு இடம் பெறும். பயிற்சியாளர்கள் அவர்களது மொழித் திறமையடிப்படையில் தரம் பிரிக்கப்படுவார்கள். அதன் பின் இவர்கள் நாட்டில் உள்ள அரசாங்க நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஓராண்டு காலத்துக்கு அவர்கள் பயிற்சி பெறும் போது 4 ஆயிரம் ரூபா வழங்கப்படும். இந்தக் காலப்பகுதியில் பரீட்சை ஒன்று நடத்தப் பட்டபின்னர் அவர்கள் பதவியில் நிரந்தரமாக்கப்படுவர்- ராஜகிரியவிலுள்ள திணைக்களத்தில் மொழி ஆய்வுகூடப் பிரிவில் பயிற்சி நடத்தப்படும் என்று அரச கருமமொழி திணைக்கள ஆணையாளர் எஸ். பத்திராஜ தெரிவித்தார். (ஐ-6)

## வாராந்த நிகழ்வு

கொழும்புத்துறை, மே 13

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு 'இன்னிசை விருந்து' அ. கிருஷ்ணானந்தன் குழுவினரால் வழங்கப்படும். நெல்லியடி அரங்கக் கலாசாலை மாணவர்கள் இதனை நடத்துவார்கள்.

பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெறும்.

இந்நிகழ்விற்கான அறிமுக வுரையை செல்வி சரோஜா- தம்பு நிகழ்த்துவார். (ஐ-30-103-173)

# பிரதேச செயலக பிரிவுகளிடையே மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், மே 13

பிரதேச செயலர் பிரிவுகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

16 ஆம் திகதி இறுதிப் போட்டி நடைபெறும். நவீன தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தும் காட்சி உயரம் பாய்தல் நிகழ்வும், வலைப் பந்தாட்ட இறுதிப் போட்டியும் அன்றைய தினம் நடைபெறவுள்ளன.

வலைப்பந்தாட்ட போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவும் மோதவுள்ளன.

யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளார்

14 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 600 வீர வீராங்கனைகள் இந்தப் போட்டியில் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.

# கோழிகளுக்குத் தடுப்பூசி

யாழ். நாவலர் வீதியில் உள்ள யாழ். கால்நடை வைத்தியசாலையில் வைத்து பிரதி வெள்ளிக்கிழமை தோறும் கோழிகளுக்கு அம்மைத்தடுப்பூசி காலை 9.30 மணி தொடக்கம் 10 30 மணிவரை ஏற்றப் பட்டு வருகிறது.

சிறிய அளவில் (20 கோழிகளுக்குள்) கோழி வளர்ப்புச் செய்பவர்கள் இந்த அலுவலகத்தில் கோழிகளைக் கொண்டு வந்து ஊசி போட முடியும் என்றும் —

கூடுதலாக கோழிவளர்ப்புச் செய்பவர்கள் அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் தங்கள் பண்ணைகளில் நேரில் வந்து ஊழியரால் தடுப்பூசி ஏற்றப்படும் என்றும் —

யாழ். கால்நடை வைத்தியசாலை [illegible] தெரிவித்துள்ளார். (ஐ-30)

# 'லங்கா முடித்த' கப்பல் பொருள்களை இறக்குகிறது

யாழ்ப்பாணம், மே 13

காங்கேசன்துறை துறைமுகத்தில் தற்பொழுது பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் 'லங்கா முடித்த' கப்பலில் இரண்டாயிரத்து 50 மெற்றிக்தொன் அரிசி, 500 மெற்றிக்தொன் சீனி, 600 மெற்றிக் தொன் பருப்பு, 100 மெற்றிக் தொன் பால்மா என்பன எடுத்து வரப்பட்டுள்ளன

இக்கப்பலுடன் காங்கேசன் துறை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்துள்ள 'குமண' கப்பலில் இரண்டாயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசியும், 750மெற்றிக்தொன் சீனியும் எடுத்து வரப்பட்டுள்ளன.

மேற்படி பொருள்கள் இறக்கும் பணிமுடிவுற்றதும் 'குமண' கப்பல் கொழும்பு சென்று அங்கிருந்து யாழ். மாவட்டத்துக்குரிய அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு மீண்டும் காங்கேசன்துறைக்கு வரவுள்ளது

இதேவேளை—

'லங்கா முடித்த கப்பல்' திருமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் பயணிகளை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபடவுள்ளது,

இந்தக் கப்பலில் திருமலைக்கு செல்பவர்களுக்கான டிக்கெட் விநியோகம் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் நடைபெற்றது. (ஐ-5)

# பளையில் இரு குளங்களை ஆழமாக்க நிதி ஒதுக்கீடு

'கெயர்' நிறுவனத்தின் நீர்நிலைகள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பளைப் பிரதேசத்தில் உள்ள இரண்டு குளங்கள் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்படவுள்ளன.

மாசாரில் உள்ள சிறு மாசார்க் குளம், முகாம் பகுதியில் உள்ள சிறுவுக்குளம் ஆகிய குளங்களே இவ்வருடம் புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக 'கெயர்' நிறுவன பளைப் பிரிவு இணைப்பாளர் தெரிவித்தார்.

அத்துடன் மாசார் முகாவில் கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள வறுமைக்கோட்டின்கீழ் வசிக்கும் குடும்பங்களுக்குப் பத்து மண் துரவுகள் (ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு ஐந்து என்ற ரீதியில்) அமைக்கவும் நிதி ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# புனரமைக்கப்படும்

ஈழத்து கதிர்காமம் என அழைக்கப்படும் புலோலி உபய கதிர்காமம் கோயில் 5 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவிருக்கின்றது.

இப் பகுதியிலுள்ள பெரிய தேவதாய் பிள்ளையார் ஆலயமும் சுமார் 2 இலட்சம் ரூபா செலவில் புனரவமக்கப் படவுஅளது. இப்பகுதியிலுள்ள நலன்விரும்பிகளும் வெளிநாடுகளில் வதியும் இப் பகுதியைச் சேர்ந்த அடியார்களும் இந்நிதியை அன்பளிப்புச் செய்துள்ளனர். (ஐ-190)

## வாசகர் திருமுகம்

# பரிகாரம் கிடைக்காதா?

யாழ். குடாநாட்டில் இன்று நூற்றுக்கணக்கான மக்கள் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பவற்றைத் தொலைத்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பகுதி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் அந்த முறைப்பாட்டுப் பிரதிகளை சோதனைச் சாவடிகளிலோ சுற்றிவளைப்புகளின் போதோ படையினரிடம் காட்டினால் அதை அவர்கள் உதாசீனம் செய்கிறார்கள். அதனால் அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள் தமது அன்றாடக் கடமைகளை செய்ய முடியாமலும் வீடுகளில் நிம்மதியாக இருக்க முடியாமலும் திண்டாடுகிறார்கள்.

தொலைத்த அட்டைகளுக்குப்பதிலாக புதியஅடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு புதிய அடையாள அட்டை வழங்க இராணுவத் தலைமைப் பீடம் அனுமதி மறுத்துள்ளது. இந்த விடயம் குறித்து தமிழ் அரசியல் கட்சியின் பிரமுகர்கள் கூட இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அரச உயர்மட்டத்துடன் கதைத்து இந்தப் பிரச்சினைக்கு பரிகாரம் காண்பார்களா என மக்கள் ஏங்குகிறார்கள்.

எஸ். அழகரட்ணம்
மீசாலை வடக்கு,
மீசாலை.

# நகரசபை கவனிக்குமா?

1996 ஏப்ரல் 19 ஆம் திகதி முதல் தபால் கந்தோர் வீதி வாகனப் போக்குவரத்துக்கு பாதுகாப்புப் பிரிவினரால் மூடப்பட்டது.;

அன்று முதல் பருத்தித்துறை, சுன்னாகம், சரசாலை கனகன்புளியடி ஊடாக வரும் சகல வாகனங்களும் நகருக்குள் நுழைவதற்கு கென்ஸ்மன் ஒழுங்கையையே பயன்படுத்துகின்றன.

இந்த வீதிக்கு 1996 இல் தாருக்குமேல் வெறும் மக்கியைப் போட்டதால் மழை காலத்தில் பாதசாரிகள் வழுக்கி விழுவதையும் வெயில் காலத்தில் காற்றுக்கு வாகனம் செல்லும்பொழுது பாதசாரிகள் மூக்கைப் பிடித்துக்கொண்டு செல்வதையும் காண முடிகின்றது. இந்த ஒழுங்கையில் வசிக்கும் குடியிருப்பாளர்களோ வீதியின் இரு மருங்கிலும் யன்னல், கதவுகளை மூடி வைப்பது வழக்கமாகிவிட்டது. இதனால் எல்லோருடைய ஆரோக்கியமும் பாதிப்படைகிறது. சாவகச்சேரி நகரசபை இந்த வீதியைக் கவனிக்குமா?

என். பெரியதம்பி.
கென்ஸ்மன் வீதி,
சாவகச்சேரி

# அக்கினி நாள் விவரம்

அக்கினி நாள் (காண்டாவனம்) எப்போது ஆரம்பம் என்பது தொடர்பாக 8 - 5 - 1999 சனிக்கிழமை சஞ்சீவியில் இரு பஞ்சாங்கங்களின் வேறுபாட்டைக் குறிப்பிட்டு சூரியன் பரணி 4 ஆம் பாதத்தில் பிரவேசிக்கும் காலமே (8 - 5 - 1999 சனிக்கிழமை) அக்கினி நாள் ஆரம்பமென்று சோதிட விற்பன்னர்கள் குறிப்பிடுவதாக வெளியிடப்பட்டிருந்தது.

ஸ்ரீ குமாரசாமி தேசிகரின் குமாரசுவாமியம் என்னும் நூலிலும், சோதிட கிரக சிந்தாமணி என்னும் பெரிய வருஷாதி நூலிலும் சூரியன் பரணி 3 ஆம் பாதம் முதல் ரோகிணி 1 ஆம் பாதம் வரை சஞ்சரிக்கும் காலமே காண்டாவன காலமென்று பாடல் மூலம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது மேலும் காஞ்சி ஆசார்யாள் மடத்திலிருந்து வெளிவரும் பிரமாதி வருட (1999—2000) பஞ்சாங்கத்திலும் இதே கருத்தின்படி பரணி 3 ஆம் பாதத்தில் சூரியன் பிரவேசிக்கும் காலமாகிய 4 - 5 -1999 அன்றே அக்கினி நாள் ஆரம்பம் குறிக்கப்பட்டமையும் மக்கள் நன்கு அவதானிக்கலாம்.

இதன்படி திருக்கணிதப் பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்ட அக்கினி நாள் ஆரம்பம் 4 - 5 - 1999 செவ்வாய்கிழமை என்பது ஆதாரபூர்வமானதும், சாஸ்திரியமானதுமாகும்.

சி. ஜெகதீஸ்வரசர்மா.
கல்வயல், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி உள்ளூராட்சி உறுப்பினர் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடல்

வடமராட்சிப் பகுதியிலுள்ள பிரதேச சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு, வடமராட்சி சிவில் நிர்வாக இணைப்பதிகாரி இணக்கம் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சிப் பகுதியிலுள்ள பிரிகேட் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில், பருத்தித்துறைப் பிரதேச சபைத்தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், வடமராட்சி தெற்குமேற்கு (கரவெட்டி) பிரதேச சபைத் தலைவர் செல்லையா சுந்தரமூர்த்தி உட்பட இரு சபைகளைச் சேர்ந்த எட்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அதிபர் ஜிப்ரியும் இந்த கலந்துரையாடலின் போது சமுகமளித்திருந்தார்.

தலைவர்கள், உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு தேவை ஏற்படின் 48 மணித்தியாலத்திற்கு முன்னர், தமக்குத்தெரிவிக்க வேண்டுமென்றும் பிரிகேடியர் சரத்கருணாரட்ண தெரிவித்திருந்தார்.

(ஐ—16-109)

# தென் பகுதியிலிருந்து விதை நெல் விவசாயத் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 13

தென்பகுதியிலிருந்து 5ஆயிரத்து 500 புசல் விதை நெல்லை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

விவசாயத் திணைக்களத்தினால் ஒதுக்கீடு செய்யப்படும் விதை நெல்லில் கமநல சேவைநிலைய உதவி ஆணையாளர் மூலம் இரண்டாயிரம் புசல் விதை நெல் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளதுடன் மீதி 3 ஆயிரத்து 500 புசல் விதை நெல் விவசாயத் திணைக்களத்தினால் எடுத்து வரப்பட்டுள்ளது.

இந்த விதை நெல் கமநல சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

# பாடசாலை பஸ்சேவை ஆரம்பிக்கக் கோரிக்கை

நவிண்டில், இரும்பு மதவடி, கொற்றாவத்தை ஊடாக மீண்டும் பாடசாலை பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் ஏ. கே. நடராசா, பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ முகாமையாளருக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

நெல்லியடி மத்திய மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் உட்பட வேறு சில பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள். இப்பாதையில் பஸ் சேவை இன்மையால் பெரிதும் பாதிப்படைந்து வருகிறார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-109)


## சிற்றூர்தி சேவை

(மினிபஸ்)

பளை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, சண்டிலிப்பாயிலிருந்து 20 பயிலுநர்களை ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் யாழ்ப்பாணம் அழைத்து வருவதற்கும், அழைத்துச் செல்வதற்கும் தரமான சிற்றூர்தி உரிமையாளர்களிடமிருந்து அரக்கு முத்திரையிட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன. தினமும் நான்கு சேவைகள் நடைபெறும்.

வைகாசி 21, வெள்ளிக்கிழமை பி. ப. 3 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு சிற்றூர்தியுடன் நேரில் வரவும்.

முகவரி: UNDP / JRRP,
125, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(65701)



## அன்பான வேண்டுகோள்

யாழ். கடைத்தெருப் பிள்ளையார் கோயில்
பிரதமகுரு
பிரம்மஸ்ரீ விஜயகாந்தக் குருக்கள்

அவர்களுக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்வதற்காக நிதி உதவி கோரப்பட்டுள்ளது. தயாள உள்ளம் கொண்டோரை (கொழும்பு கொட்டாஞ்சேனை இலங்கை வங்கிக் கிளைக் கணக்கு இலக்கம்: 1-0168093) உதவிக்கரம் நீட்டுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

''நியந்த்ரீ''
சிவன் கோயில்,
நல்லூர்.

(சி/7519)



## அந்தண மாணவர்களுக்கு

1997ஆம் ஆண்டில் நடைபெற்ற 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையிலும் க. பொ. த. (உ/த), (சா/த) பரீட்சைகளிலும் சித்தியடைந்த அந்தண மாணவர்களும், வெகுதானிய வருடத்தில் ஆசாரியாபிஷேகம் செய்து கொண்ட அந்தணரும் உபநயனம் செய்யப்பெற்ற அந்தணச் சிறார்களும் தங்கள் பெயர் விவரங்களை 1999 - 05 - 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக,

விளம்பர இல: 880,
மே/பா. உதயன்.
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(சி/7518)


# தமிழ் மொழித் தின இறுதிப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 13

யாழ். வலயப் பாடசாலைகளுக்கிடையில் தமிழ்மொழித் தின இறுதிப் போட்டிகள் நாளை காலை 9 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் ஆகிய கோட்டங்களில் முதலாம் இடத்தைப் பெற்றவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றுவர்.

இலக்கிய நாடகம், வில்லுப் பாட்டு, விவாதம் ஆகியவற்றின் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமையும் —

இசை நாடகம், நாட்டுக் கூத்து ஆகியவற்றின் போட்டிகள் எதிர்வரும் 17 ஆம் திகதியும் — நடைபெறும்.

(இ-3-7)

## பாடசாலை...

(ஏழாம் பக்கத் தொடர்)

விருத்தி செய்வது சுலபமல்ல என்றும் குறை கூறப்பட்டது.

பண்புகளை குறுகிய காலத்தில் விருத்தி செய்ய முடியாது என்பது அனைவருக்கும் தெரிந்தது. ஆனால் அதற்காக அவற்றினை விருத்தி செய்யும் வழிகளில் ஈடுபடக்கூடாது என்பதல்ல. தேசிய கல்வி சீர்திருத்த ஆணைக்குழுவினர் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் முகவுரையில் தேசிய இலக்குகளும் தகைமைகளும் என்னும் விடயம் குறித்து குறிப்பிடும் போது, இவ்விலக்குகளையும் தகைமைகளையும் ஒருவர் தன் பாடசாலைக் காலத்தினுள் முழுமையாக அடைந்து கொள்ளக் கூடும் என நாம் கருதவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

அதுபோலவே பா. ம. க. முறையில் நிரல்படுத்தப்பட்ட பண்புகளை ஒவ்வொரு பாட ஆசிரியரும் தரம் 6 இல் இருந்து அவதானித்து கணிப்பீட்டுக்கு உட்படுத்தும் போது அப் பண்புகள் மெல்ல மெல்ல வளர்த்து எடுக்கப்பட முடியும். அது பிள்ளையின் ஆளுமை விருத்திக்கு ஓர் அடித்தளமாகவும் அமையலாம்.

பிள்ளைக்கு மகிழ்ச்சியினை கொடுப்பதும் பங்குபற்றும் மனப்பான்மையினை வளர்ப்பதும் பிள்ளையின் உள, உடல் வளர்ச்சியைத் தூண்டிவிடுவதும் எதிர்கால வாழ்வொன்றுக்கான அடிப்படைத் திறன்களை வழங்கக்கூடியதுமான பா. ம. க. முறை பிள்ளையின் ஆளுமை வளர்ச்சிக்கு உதவும் பா. ம. க குறித்த ஒரு நேர்மனப்பாங்கு ஆசிரியர்களிடம் வளர்த்து எடுக்கப்படும்போது ஆசிரியர் உலகம் அதனை வரவேற்று மகிழ்ச்சியுடன் செயற்படும். பா. ம. க. நெகிழ்ச்சியுடன் கூடிய ஒரு முறையாகும். எனவே எதிர்காலத்தில் தேவைகளுக்கும் விருத்திக்கும் ஏற்றவாறு அதனை மாற்றியமைக்க முடியும்.

★

# சமய சந்நிதிகளில்

நல்லூர், மே 13

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத ஸ்ரீ காயாரோஹணேஸ்வர சுவாமி கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு பஞ்ச இரதோற்சவமும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(க-103-30)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 13

யாழ். வண்ணை சாந்தையர் மடம் அருள் மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலில பாலஸ்தாபன கும்பாபிஷேகம் கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெற்றது. (க-30)

★ ★ ★

நெடுந்தீவு, மே 13

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசாமியார் ஆலய புனராவர்த்தன சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை ஊரெழு ஸ்ரீ பர்வத பத்தினி அம்மன் ஆலயத்தில் இயந்திர பூசை ஆரம்பமானது. (க-111)

★ ★ ★

பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலி இடம்பெறவுள்ளது. (க)

★ ★ ★

சுன்னாகம் கதிரமலை ஸ்ரீசிவன் கோயில் வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமையும் தீர்த்தத் திருவிழா நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது. (க-30)

★ ★ ★

உரும்பிராய் கிழக்கு ஸ்ரீசிவபூத நாதேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர்த் திருவிழா நாளை வெள்ளிக்கிழமையும், தீர்த்தோற்சவம் நாளை மறுதினமும் இடம்பெறும். (க-30)

★ ★ ★

இணுவில் விசாலாட்சி சமேத ஸ்ரீ விஸ்வேஸ்வர சுவாமி கோயிலின் அலங்கார உற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலையும், மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது. (க-30)

★ ★ ★

பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலி இடம்பெறவுள்ளது. (க)

★ ★ ★

கரணவாய் உச்சிற் புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்

எதிர்வரும் 29 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் அன்று சைவசமய அறிவுப் போட்டியில் சித்தியடைந்தோருக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறும். (க-30)

★ ★ ★

மட்டுவில் தெற்கு வேரக்கேணி கந்தசாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தேர் உற்சவம் மே 28 ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் மே 29 ஆம் திகதியும் நடைபெறும். [ஐ-117]

★ ★ ★

சுதுமலை அருள்மிகு புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11-00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினெட்டுத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

உற்சவகாலங்களில் மாலை 6-30 மணி முதல் 7-30 மணி வரை சொல்லின் செல்வர் ஆறு. திருமுருகன் 'ஸ்ரீதேவி பாகவதம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார். [க-139-30]

# மாடுகளுக்கு நோய்

தென்மராட்சி, மே 13

தென்மராட்சி பிரதேசத்தில் மாடுகளுக்கு கால், வாய் ஆகிய இடங்களில் புண்கள் ஏற்படுவதையடுத்து சாவகச்சேரி கால் நடை வைத்தியர் அலுவலக உத்தியோகத்தர்கள் தனங்களப்பு, வரணி, மந்துவில், மட்டுவில் சரசாலை ஆகிய பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோய்க்கான தடுப்பு மருந்துகளை வழங்கி வருவதாக கால் நடை வைத்தியர் தெரிவித்தார்.

மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள இந்த நோய்க்கான தடுப்பு மருந்துகள் கால் நடை வைத்தியர் அலுவலகத்தில் உள்ளதால் இந்த நோய் காணப்பட்டால் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.

(ஐ-117)

# தேங்காய் விலை வீழ்ச்சி

குடாநாட்டில் தேங்காய் விலை திடீரென வீழ்ச்சி அடைந்துள்ளது. சந்தையில் 40 ரூபா விற்கப்பட்ட தேங்காய் தற்போது 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

தற்போது காற்று வீசுவதால் தென்னை மரங்களில் தேங்காய் விரைவில் முற்றி விடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-139]


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் முக்கிய அறிவித்தல்

### மரமுந்திரிகைக் கன்றுகள் விநியோகம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் விசேட நிதியிலிருந்து மரமுந்திரிகைக் கன்றுகள் முதல் கட்டமாக ஏற்கனவே விநியோகிக்கப்பட்டது. தற்பொழுது 2 ஆம் கட்டமாக 14 - 05 - 1999 ஆம் திகதி மாலை 2-00 மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பிரதேச சபைத் தலைவர் திரு. ந திரிலோகநாதன் அவர்களால் விநியோகிக்கப் படவுள்ளது. எனவே. அன்றையதினம் மரமுந்திரிகைக் கன்றுகள் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாத எமது பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தலைவர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

(சி/7517)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் பகுதி இளைஞர் செயலகத்துக்கு விஜயம்

வடக்கு தெற்கு பாலம் நிகழ்ச்சித் திட்டத்தில் கீழ் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள தென் பகுதி இளைஞர், யுவதிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் யாழ். செயலகத்தில் அரச அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்களை நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் க. சிவதட்சணாமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணத்து இளைஞர்களின் பிரச்சினைகள் உட்பட பல விடயங்கள் தொடர்பாக தென்பகுதி இளைஞர்கள் கேட்டறிந்து கொண்டனர்.

நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இந்த இளைஞர்களும் யுவதிகளும் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை இங்கு தங்கியிருப்பார்.

இன்று யாழ். நகரப் பகுதியைச் சுற்றிப் பார்வையிடும் இவர்கள் தென்மராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள இளைஞர் கழகப் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளனர். (இ-100-5)

# தெட்சணாமூர்த்தியின் 24 ஆம் நினைவு தினம்

## யாழ்.,கொழும்பில் நிகழ்வுகள்

தவில்மேதை ''லயஞான குபேரபூபதி'' அமரர் எஸ். வி. தெட்சணாமூர்த்தியின் 24 ஆவது நினைவு நாளான இன்று யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் கட்டுடை சைவவித்தியாசாலை மண்டபத்தில் வித்தியாசாலை அதிபர் கடவுள் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதமவிருந்தினராக வலி.தென் மேற்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன் கலந்து கொள்வார்.

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

கொழும்பில் கப்பித்தாவத்தை பிள்ளையார் ஆலயத்திலும் நினைவு நாளை ஒட்டி விசேட ஆராதனைகளும், விழாவும் நடைபெறவிருக்கின்றன.

இந்த விழாவுக்கு திருமதி வசந்தா வைத்தியநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

தவில் மேதை கணேஷ் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவிருக்கிறார். (இ-3)

### ஸ்ரான்லி...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் ஆணைக்குழு அதிகாரியிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றும்—பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

இதையடுத்துப் பொலீஸாரின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலக அதிகாரி செல்வி. கௌரி சுந்தரலிங்கம் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

பிரஸ்தாப மாணவனை சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும்—

அவரை அவரின் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறும் — பதில் நீதிவான் சபாநாதன் அவருக்கு உத்தரவிட்டார்.

[இ-3-5-ரீ-7-51-173-86-139-15-]


விக்னா கல்வி நிறுவனம்

இன்று A/L 98 DAY

கம்பனி (8-15 — 10-00 a.m.)

நாளை A/L 99

கிரயக் கணக்கீடு (3-00 — 5-15 p.m.)

நாளை மறுதினம் A/L 2000

பங்குடைமை முடிவுக் கணக்கு ] பிரிவு I 7-00—8-00 a.m. பிரிவு II 1-00—2-00 p.m.

Mr. BALAVASAN (65669)



மலிவு! மலிவு!! மலிவு!!!

(CLEARANCE SALE)

20-05-99 வரை

அனைத்து பல்வகை ஆடைவகைகள், துணிவகைகளையும்

விற்றுத் தீர்த்தல்

விஷேட கழிவு விற்பனை

ரம்மியாஸ் சில்க்ஸ்

121, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

மலிவு! மலிவு!! மலிவு!!!

(சி/7520)


# கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க அங்கத்தவர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்குயாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (இ-7)

# போராட்டம் தொடர்கிறது

தமது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று கோரி யாழ். லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்கிறது.

நேற்றையதினம் மாணவர்கள் கொளுத்தும் வெயிலிலும் சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதைக் காணமுடிந்தது.

தமது பகிஷ்கரிப்புப் போராட்டம் குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என மாணவ பிரதிநிதிகள் தெரிவித்தனர். (இ-7-ரீ)

### சோதனை...

[முதலாம் பக்கத் தொடர்]

என்றும் —

அச்சமயம் ஒருவர் உயிரிழந்தார் என்றும் — மற்றும் இருவர் தப்பிவிட்டனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் காரணமாக அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது. (இ-164-3)

### கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

தார்.

பஸ்கள் மூலம் தமிழர்கள் பொலீஸ் நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் —

விசாரணையின் பின்னர் பலர் விடுவிக்கப்பட்டனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

வவுனியாவில் இருந்து தூர இடங்களுக்கான சேவைகள் நேற்றுப் பாதிக்கப்பட்டன. (இ-164-3)

### பொலீஸாரின்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தச்சம்பவத்தில் பண்டார என்பவரே உயிரிழந்தவராவார்.

பம்பைமடுப் பகுதியிலுள்ள காவல் நிலையில் இருபொலீஸார் கடமையில் இருந்தனர் என்றும்—

அச்சமயம் இருவர் சைக்கிளில் அவர்களை நோக்கி வருவதைக் கண்டதும் அவர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் என்றும்—

இதன் காரணமாக சைக்கிளில் வந்த கான்ஸ்டபிள் உயிரிழந்தார் என்றும்—தெரிவிக்கப்பட்டது. (இ-14)


புதிய 30 மாணவர்களுக்கான அனுமதி

A/L 2000

கணக்கீடு

பங்குடமை

ஆரம்பம்:- 16-05-99 ஞாயிறு

பிரிவு I — 1 மணி

பிரிவு II — 12 மணி

D. M. I.

366, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

D. SAM (இ/7513)


# புலிகள் இயக்கம் மீதான குற்றச்சாட்டுக்கு மறுப்பு

சிட்னி, மே 13

ஆஸ்திரேலிய கிரிக்கெட் விளையாட்டு நடுவர் ட்ரயல் ஹெயருக்கு எதிராக விடுதலைப் புலிகள் இயக்கம் கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக வெளிவந்த பத்திரிகைச் செய்திகளை சிட்னியில் உள்ள ஆஸ்திரேலிய தமிழ்க் குழுக்கள் நிராகரித்துள்ளன.

இலங்கையின் சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் பந்தை எறிவதாக ட்ரயல் ஹெயார் நான்கு வருடங்களுக்கு முன்னர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

சிட்னியில் இருந்து வெளிவரும் 'டெய்லி டெலிகிராவ்' பத்திரிகை நேற்று முன்தினம் வெளியிட்ட செய்தியில் முரளிதரன் பந்தை எறிவதாக ஹெயார் தெரிவித்த குற்றச்சாட்டு தொடர்பாக விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் எனக் கூறப்படும் ஒருவர் ஹெயாருக்கு கொலைப் பயமுறுத்தல் விடுத்திருந்ததாகத் தெரிவித்திருந்தது.

இதனையே தமிழ் குழுக்கள் நிராகரித்துள்ளன. (இ-6)

# திருத்தப்படாத நிலையில் வினாவெளி மயானம்

வடலியடைப்பு மக்களின் பாவனையில் இருக்கும் விளாவெளி இந்து மயானம் நீண்டகாலமாகத் திருத்தப்படாது இருப்பதால் அப்பகுதி மக்கள், மயானக் கடமைகளைச் செய்வதில் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மயானத்தில் இருந்த பிரேதம் எரிக்கும் கட்டடம், மக்கள் சங்கு மடம் என்பன 95 ஆம் ஆண்டுப்பிற்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது சேதம் அடைந்துள்ளன.

அந்தப்பகுதி முழுவதும் பற்றைக் காடாகக் காட்சியளிக்கின்றது.

இதனால் அங்கு பிரேதங்களை தகனம் செய்ய செல்வோர் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. (இ 100)

# போதனாசிரியர் இல்லாததால் கால்நடை வளர்ப்போர் பாதிப்பு

தென்மராட்சி, மே 13

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் ஒரேயொரு கால்நடை அபிவிருத்தி போதனாசிரியரே கடமையாற்றுவதால் தென்மராட்சி பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களின் கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மூன்று போதனாசிரியர்கள் கடமையாற்றி வந்தபோது ஒருவர் இளைப்பாறியும், மற்றவர் இடமாற்றம் பெற்றும் சென்று விட்டதால் ஒரேயொரு பெண் போதனாசிரியரே தற்போது கடமையாற்றி வருகிறார்.

நாவற்குளியிலிருந்து இயக்கச்சி வரையுள்ள பகுதிகளை உள்ளடக்கி சாவகச்சேரி கால்நடை வைத்தியர் பிரிவு செயற்படுவதால் பெண் போதனாசிரியர் வெளியிடங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் கால்நடை வளர்ப்போர் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் மற்றும் தேவைகளுக்குச் சாவகச்சேரிக்கு வந்து செல்லவேண்டியுள்ளது. (இ-117)

# ஒட்டுசுட்டானில் மோதல்!

கடந்த திங்களன்று ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக வந்த 3 ஆவது விசேட படையணி மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். இதன் போது இரு படையினர் கொல்லப்பட்டனர் என்று புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

உயிரிழந்த படையினரின் உடல்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன என்றும் —

இந்தமோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார் என்றும்

இராணுவத்தினரின்விசேட படையினரின் 'கிற்பாக்'— இரண்டு, எம் — 4 குண்டுகள் நான்கு, நடுத்தர ரவைகள்—150, பி. கே. ரவைகள் இணைப்பிகளுடன் — 75, ஆர். பி. ஜி. எல். எம். ஜி. இணைப்பிகளுடன் — 150, ஏ. கே. ரவைக்கூடு தாங்கிகள் — இரண்டு, தண்ணீர்க் கொள்கலன்—8 என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலில் சுடர் அல்லது மின்னல் (செல்லப்பு அசோக்குமார் — யாழ்ப்பாணம்) என்பவர் உயிரிழந்ததாகப் புலிகளின்குரல் தெரிவித்தது.

### பல்கலைக்...

[முதலாம் பக்கத் தொடர்]

அதிகாரிகளைக் கொண்ட குழு அமைத்தல், இந்தக்குழு ஒருமாத காலத்துக்குள் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கும்.

★ சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படும் வரை ஊழியர்களுக்கு 2 ஆயிரம் ரூபா படி வழங்கல்.

★ 150 நாள்களுக்கு மேல் பணிபுரிந்த சமயாசமய ஊழியர்களை நிரந்தரமாக்கல்.

★ ஓய்வூதியத்திட்டத்தை மூன்று மாத காலத்துக்குள் அமுல்படுத்த நடவடிக்கை எடுத்தல். [இ-3-6]

### மடு மாதா...

[முதலாம் பக்கத் தொடர்]

லிகமாக வாபஸ்பெறும் நடவடிக்கையாக இது அமையக் கூடாது'' என வலியுறுத்தினர்.

எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி மடு மாதா உற்சவம் நடைபெறவிருக்கின்றது. [இ-21]

### நீதிமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இயக்கத்தினர் பலவந்தமாக தடுத்துவைத்திருப்பதாகவும்—

அவரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறும்—

கோரி முகமட் அன்வர் என்பவர் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவை விசாரித்த மேல் நீதிமன்ற நீதிபதிகளான அமீர் இஸ்மாயில், ஜி ஜயவிக்கிரம ஆகியோர் மேற்படி உத்தரவை விடுத்தனர்.

எட்டு மாதங்களுக்கு முன்னர் பலாத்காரமாக அழைத்துச் செல்லப்பட்ட தனது மகன் தொடர்பாக ஒரு மாதத்துக்கு முன்பே தாம் அறிந்து கொண்டதாகவும்—

அதன் பின்னர் கொழும்பில் உள்ள ஈ.பி.டி.பி தலைமையகத்தில் சென்று கேட்டபோது 5 வருட பயிற்சிக்காக மகனை ஊர்காவற்றுறைக்கு அனுப்பி விட்டதாக தெரிவிக்கப்பட்டதாகவும்—

பலாத்காரமாக தடுத்து வைப்பது சட்டவிரோதமான செயல். எனவே மகனை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த ஈ.பி.டி.பி. அமைப்புக்கு உத்தரவிட வேண்டும் என்றும்—

முகமட் அன்வர் தனது மனுவில் கோரியுள்ளார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-05-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org